# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2004, நவெம்பர் மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 74.50** **தபாற் செலவு : ரூபா 35.00**

## 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ 16/2004

### 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது :—

*2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "மூலதன வருவாய்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூலதன வருவாய் ; அத்துடன்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் ;

" (ஏஏ) லொத்தர், பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகள் ; அத்துடன்".

**3.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தி (LXXIV) என்பதில் "முதலீட்டு வங்கியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"முதலீட்டு வங்கியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (LXXIV) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் உட்புகுத்துவதன் மூலமும் :—

"(LXXV) 1988 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ஆம் தேதியன்று டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட பொருத்தனைக் கிணங்க, தாபிக்கப்பட்ட நோர்டிக் அபிவிருத்தி நிதியம் ;

(LXXVI) 2003ஆம் ஆண்டின் 39ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப் பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் ;

(LXXVII) 2000 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வரியிறுப்பனவு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வரியிறுப்பனவு நிறுவகம்." ;

(இ) அப்பந்தியின் காப்பு வாசகத்தில் உள்ள "(LXXIV)" என்னும் சொல்லுக்கும் இலக்கங் களுக்கும் பதிலாக, "(LXXIV) மற்றும் (LXXV)" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :—

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் (iii) ஆம் உட்பந்தியில் "கொடுக்கல் வாங்கல்களிலுமிருந்து எழுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுக்கல் வாங்கல்களிலுமிருந்து 2003 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எழுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**4.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அப்பிரிவின் (உஉஉஉ) என்னும் பந்தியை நீக்கம் செய்தவன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாக திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது —

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவிற்கு அப்பிரிவை (1) ஆம் உட்பிரிவாக மீளவிலக்கமிடுதவன் மூலமும் ;

(2) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "(அ) அல்லது (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அக்கம் பனியினால் பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திலிருந்து கம்பனியொன்றின் பங்குதாரர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "எக்காலப்பகுதிக்காக முறையே (அ), (ஆ), (இ), (ஈ), அல்லது (ஊ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யபட்டவாறான பங்கிலாபங்கள் (எக்காலப்பகுதியின்போது அக்கம்பனியால் பெறப்பட்ட ஏதேனும் அத்தகைய பங்கிலாபத்திலிருந்து கம்பனியொன்றின் பங்குதாரர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அவ்வேதேனும் பங்கிலாபம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "(அ) அல்லது (ஊ) என்னும் பந்தியில்" என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படுமிடங்களி லெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, முறையே "(அ), (ஆ), (இ), (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2)(அ) ஓராம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் 2002 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்பட்டுள்ள தும் அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்டுள் ளதுமான ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் 2004, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கு ஏற்புடையன வாதலாகாது ; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், அப்பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட 2002, நவெம்பர் 6 ஆம் தேதிக்கு அல்லது அதன் பின்னர் ஏதேனும் விலக் களிப்புக்குத் தகைமையுடையதாயிருந்த ஏதேனும் கம்பெனியால் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் தொடர்பிலான ஏதேனும் விலக்களிப்புக்கான தகைமைக்கு ஏற்புடையனவாதலாகாது .".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "பெறப்பட்ட ஏதேனும் பரிசு ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் பெறப்பட்ட ஏதேனும் பரிசு;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "எந்த ஒரு கம்பெனியுடன் ஓர் உடன்படிக்கை செய்துள்ளதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, ஏப்பிறல் 01ஆம் திகதிக்கு முன்னர் எந்தவொரு கம்பெனியுடன் உடன்படிக்கை செய்துள்ளதோ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் "எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (க) என்னும் பந்தியில், "முயற்சியொன்றிலிருந்து எவரேனுமாளுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முயற்சியொன்றிலிருந்து 2004, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் எவரேனுமாளுக்குக்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(5) அப்பிரிவின் (ந) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியில், "விற்பனையிலிருந்து எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விற்பனையிலிருந்து 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(7) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

" (மம) அத்தகைய கையுதிர்ப்பானது, கொள்ளலின் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் இடம் பெற்றிருக்குமிடத்து ஏதேனும் பங்கிற்கான அல்லது போனஸ் பங்கிற்கான அல்லது ஆணைக்கான ஓர் உரிமை உட்பட ஏதேனும் பங்கின் விற்பனையிலிருந்து 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு எவரேனும் "ஆளினால் பெறப் பட்ட அல்லது கூறு (நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் தவிர்ந்து) அவ ருக்குத் திரண்ட ஏதேனும் இலாபம் "

ஆயின், இரண்டாண்டுக் காலப்பகுதியானது ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பிற்கு அல்லது பரஸ்பர நிதியத்திற்கு ஏற்புடைத் தாக மாட்டாது. " ; அத்துடன்

(8) அப்பிரிவின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :

"இப்பந்தியின் நோக்கங்களுக்கு "இலாபம்" என்பது "வருவாய்களையும் உள்ளடக்கும்".".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**7.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, யூன் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையால்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு "எழும் இலாபங்களினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2005, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழும் இலா பங்களினதும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடு வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தன் 21அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**9**. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 21அ என்பது இத்தால் நீக்கஞ் செய்யப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஏதேனும் குறித்துரைக் கப்பட்ட பொறுப்பு முயற்சி யிலிருந்து கம்பெனியின் இலாபங்கள் மற்றும் வருமானம் எவையும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

21அ. (1) ஏதேனும் கம்பெனியால் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதும் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொண்டு நடாத்தப்பட்டதுமான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து பெறப்பட்ட 3 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) பொறுப்பு முயற்சி இலாபமீட்டத் தொடங்கிய தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அது வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய தேதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்கு, இவற்றுள் எந்தக்காலப்பகுதி முந்தியதோ அக்காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு கம்பெனியொன்று தொடர்பில் "குறித்துரைக்கப் பட்ட பொறுப்பு முயற்சி" என்பது —

(அ) (i) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்டதும் அத்தகைய பொறுப்பு முயற்சியில் முதலீடு செய்யப்பட்ட குறைந்தபட்சம் ரூபா இரண்டரை மில்லியன் முதலீடொன்று டன் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொழிற்பாடுகளைத் தொடங்கியதும் ;

(ii) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்டதும் அத்தகைய பொறுப்பு முயற்சியில் முதலீடு செய்யப்பட்ட குறைந்தபட்சம் ரூபா ஐம்பது மில்லியன் முதலீடொன்றுடன் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொழிற்பாடு களைத் தொடங்கியதும் ;

(iii) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்டு பொறுப்பு முயற் சியில் கொண்டு நடாத்தத் தொடங்கிய தும் ; அல்லது

(iv) அத்தகைய பொறுப்பு முயற்சியில் முதலீடு செய்யப்பட்ட குறைந்தபட்சம் ரூபா பத்து மில்லியனுடன் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட தும் ;

கமத்தொழில், கமநலமுறை வழிப்படுத்துதல், கைத்தொழில் மற்றும் பொறிக் கருவிகளின் உற்பத்தி, பொறித் தொகுதி உற்பத்தி, இலத்திர னியல் பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அல்லது தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சார்புடைய சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ளதுமான கம்பெனியொன்றினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்பு முயற்சி யொன்று எனப் பொருள்படும்.

2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி உற்பத்தி முறைகள் மற்றும் வெளியீடு தொடர்பில் அத்தகைய கம்பெனியால் செய்யப்படும் பண்டங்களிலிருந்து அல்லது வியாபாரப் பண்டங்களிலிருந்து தனிவே றான பண்டங்களை அல்லது வியாபாரப் பண்டங்

*களை உற்பத்தி செய்யும் செயற்பாட்டை 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கியிருக்குமாயின், அத்துடன் அத்தகைய செயற்பாட்டிலிருந்து கிடைக்கும் இலாபங்களையும் வருமானத்தையும் புறம்பாக ஆய்ந்தறியக்கூடியதாயிருக்குமிடத்தும் அத்தகைய கம்பெனி குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பொறுப்பு முயற்சிகளைக் கொண்டு நடாத்து வதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*விதித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு கிணங்கியதும் -*

(ஆ) (i) *இரண்டாம் உட்பிரிவின் (அ) ஆம் பந்தியில் (ii) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறான அதே முதலீட்டு மூலப் பிரமாணங்களின்கீழ் தகைமைபெறும் கம்பெனியொன்றி னால் கொண்டுநடாத்தப்படுவதுமான ஏதேனும் குறித்தொதுக்கப்பட்ட கருத் திட்டம் ;*

(ii) *கம்பெனியொன்றினால் ரூபா இரு நூற்றி ஐம்பது மில்லியனை விஞ்சிய முதலீடொன்றுடன் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொண்டு நடாத்தப்படுவதுமான ஒரு பொறுப்பு முயற்சி ; அத்துடன்*

(இ) *கம்பெனியொன்றினால் ரூபா இரு நூற்றி ஐம்பது மில்லினை விஞ்சிய முதலீ டொன்றுடன் 2004, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொண்டு நடாத்தப்பட்டதும் அமைச்ச ரால் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை யால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு முன் னோடி இயல்பினதுமான ஒரு பொறுப்பு முயற்சி ;*

*(3)(அ)* ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டவாறு ஏதேனும் முன்னோடி பொறுப்பு முயற்சியில் ரூபா ஆயிரம் மில்லியனுக்குக் குறையாத முதலீடொன்றையுடைய கம்பெனியொன்றுக்கு விலக்களிப்புக் காலப்பகுதியானது நிரை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட நேரொத்த காலப்பகுதியாதல் வேண்டும். ஆயினும் கீழே நிரை I இல் தரப்பட்டுள்ளவாறு நேரொத்த குறைந்த பட்ச முதலீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

| நிரை *I* (ரூபா மில்லியன்) | நிரை *II* (ஆண்டுகள்) |
|---|---|
| 1000 முதல் 2499 வரை | 08 |
| 2500 மற்றும் அதற்குமேல் | 10 |

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் பந்தி (ஆ) என்பதன் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டுத் தொகையானது ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கம்பெனி எதற்கும் ஏற்புடையதாதலாகாது ;

(இ) மேலே குறிப்பீடுசெய்யப்பட்டவாறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது குறித்தொதுக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது முன்னோடிப் பொறுப்பு முயற்சியிலிருந்து எழுகின்ற வருமானத்திற்கு மேலதிகமான வேறு ஏதேனும் வர்த்தகத்திலிருந்து அல்லது வியாபாரத்தில் இருந்து வருமானம் பெறும் கம்பெனியொன்றின் விடயத்தில் இப்பிரிவின்கீழ்

ஏற்பாடு செய்யப்பட்ட விலக்களிப்பானது விடயத்திற்கேற்ப இயைபான குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து, குறித்தொதுக்கப்பட்ட கருத்திட்டத்திலிருந்து அல்லது முன்னோடிப் பொறுப்புமுயற்சியிலிருந்து எழுகின்ற இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் மாத்திரமே ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்கு -

(i) "கமத்தொழில்" என்பது ஏதேனும் விவரணத்திலான தாவரங்களுடன் காணிப் பயிர்ச்செய்கை, கோழிப் பண்ணைகள், செயற்கை முறையில் சினையூட்டுதல், மிருக வைத்தியம் மற்றும் வேறு ஆதார சேவைகள் உட்பட மீன் வளர்ப்பு அல்லது விலங்கு வேளாண்மை என்று பொருள்படும் ;

(ii) "கமநல முறைபதப்படுத்துகை" என்பது ஆழ்கடல் மீன்பிடித்தல் உட்பட ஏதேனும் கமத்தொழில் உற்பத்திப்பொருளை அல்லது மீன்பிடி உற்பத்திப்பொருளை முறைபதப்படுத்துதல் என்று பொருள் படும். ஆனால், மொத்த அளவிலான கருத்தேயிலையின் பதப்படுத்தலையும் மற்றும் மதுபான உற்பத்தியையும் உள்ளடக்காது ;

(iii) "பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்கள்" என்பது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பொறுப்புமுயற்சியின் மொத்த விற்பனைவரவில் கூட்டு மொத்தம் எண்பது சதவீதத்திற்குக் குறையாமல் அத்தகைய பாரம்பரியமற்ற பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்து

அல்லது கருதப்பட்ட ஏற்றுமதியிலிருந்த தாயிருக்குமிடத்து அத்தகைய பண்டங்களின் கருதப்பட்ட ஏற்றுமதி உட்பட (மொத்த அளவிலான கருந்தேயிலை, கிறேப் இறப்பர், சீட் இறப்பர், கழிவு இறப்பர், இறப்பர் பால், பசுமையான தேங்காய் என்பன தவிர) எவையேனும் பண்டங்கள் எனப் பொருள்படும் ;

(iv) "கருதப்பட்ட ஏற்றுமதி" என்பது பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருளொன்றான ஏதேனும் வியாபாரப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்காக, தயாரிப்பதற்காக, அல்லது பொதியிலடைப்பதற்காக அத்தகைய ஏற்றுமதியாளரால் மேலும் உற்பத்தி அல்லது தயாரிப்பின்றி அல்லது எவரேனும் ஏற்றுமதியாளருக்கு எவையேனும் பண்டங்களின் உற்பத்தி அல்லது தயாரிப்பு மற்றும் வழங்கல் இன்றி அத்தகைய பண்டங்களின் ஏற்றுமதியாளர் எவருக்கும் எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் எவையேனும் வியாபாரப் பண்டங்களின் (மொத்த அளவிலான கருந்தேயிலை, கிரேப் இறப்பர், சீட் இறப்பர், கழிவு இறப்பர், இறப்பர் பால் மற்றும் பசுமையான தேங்காய் என்பவற்றைத் தவிர) உற்பத்தி அல்லது தயாரிப்பு அத்துடன் வழங்கல் என்று பொருள்படும் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 21ஈ என்பது "ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபட்டுள்ளதும் ஒரு புதிய பொறுப்பு முயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் அத்தகைய புதிய பொறுப்பு முயற்சியைத்

தொடங்குகின்ற ஏதேனும் கம்பெனியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனியே ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபட்டுள்ளதும் ஒரு புதிய பொறுப்பு முயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் அத்தகைய புதிய பொறுப்பு முயற்சியைத் தொடங்குகின்ற ஒரு கம்பெனியின் ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21உ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 21உ என்பது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் மூன்று ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியானது :–

(அ) கொள்ளப்பட்ட வியாபாரம் இலாபமீட்டத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டிலிருந்து ; அல்லது

(ஆ) கொள்ளப்பட்ட தொழில் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட இரண்டாண்டுகளுக்குப் பிந்தாத ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து

"எது முந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்படுதல் வேண்டும்",

(2) "கொள்ளுகின்ற" என்னும் சொற்பதத்தின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"கொள்ளுகின்ற" என்பது –

(i) சொந்தக்காரரொருவராக தொழில்முயற்சியொன்றின் சொத்தாண்மையைக் கொள்ளுதல் ;

(ii) முகாமைத்துவ உரிமைகளுடன் அல்லது பங்காளராக அல்லது கூட்டுத்தொழில் முயற்சிப் பங்காளர் ஒருவராக தொழில் முயற்சியின் ஐம்பத்தொரு சதவீதத்திற்குக் குறையாத சொத்துவத்தைக் கொள்ளுதல் ; அல்லது

(iii) ஓர் உறுதி என்ற வகையில் அத்தகைய தொழில்முயற்சியின் பங்குகளைக் கொள்ளுவதன் மூலமாகத் தவிர (சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் ஊழியர்கள் உட்பட) வியாபாரத்தைக் கொள்ளுதல்

என்று பொருள்படும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 21ஊ அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் நூறு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஏ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் "1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட முதலாவது முதலீட்டைச் செய்யும் நேரத்தில் ஓர் இணைக்கப்பட்ட கம்பெனியாகவுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முதலாவது முதலீட்டைச் செய்யும் நேரத்தில் ஓர் இணைக்கப்பட்ட கம்பெனியாகவுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "வாணிபத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப் பீட்டாண்டிலிருந்து முதல் இரண்டு ஆண்டு களின்போது எவையேனும் பங்கிலாபங்கள் வெளிப் படுத்தப்படின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாணிபத் தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்து வதற்குத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட் டாண்டிலிருந்து இரண்டு ஆண்டுகளின்போது எவையேனும் பங்கிலாபங்கள் வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் ஆண்டில் செய்யப்பட்ட மொத்த குறித்துரைக்கப்பட்ட முதலீட்டின் இருபது சதவீ தத்திற்கு மேல் அத்தகைய தணிவுடைய மூலதனக் கம்பெனியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இணைக்கம்பெனிகளில் செய்யப்பட்டிருப்பின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (7) இப்பிரிவின் நோக்கங்களுக்கு "இணைக்கம் பெனி" என்பது தாய்க்கம்பெனி ஒன்றையும் தாய்க்கம்பெனியானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைநிலைகளைக் கொண்டிருக்குமாயின் அத்துடன் அத்தகைய துணைநிலைகள் அத்தகைய துணைநிலையின் பணிப்பாளர் சபையின் பெரும்பான்மை யொன்றை நியமிப்பதன் மூலம் அல்லது அத்தகைய துணைநிலையின் ஒப்புரவு பங்கு மூலதனத்தின் பெயரளவிலான பெறுமதியில் அரைவாசிக்குமேல் வைத்திருப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுமிடத்து அதன் எல்லாத் துணைநிலைகளையும் உள்ளடக்கிய ஒரு கம் பெனித் தொகுதிக்குட்பட்ட ஏதேனும் கம்பெனி என்று பொருள்படும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய ஆளினால்" எனனும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய ஆளினால் 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஆ(1) உட்பந்தி (ii) இல் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஆ) 2003 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (1) உட்பந்தி (ii) இல் அல்லது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

(ஆஆ) எவரேனும் ஆளினால் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் அத்தகைய ஆளினால் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட பின்வரும் சொத்துக்களின் உராய்வினாலும் தேய்மானத்தினாலும் அத்துடன் அவற்றின் பாவனையினின்றெழுவதனாலும் மதிப்பிறக்கத்திற்கான விடுதொகையொன்று —

(i) அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட அல்லது பொருத்தி உருவாக்கப்பட்ட துணையுறுப்புகள் உட்பட தகவல்

*தொழில்நுட்பவியல் உபகரணங்களும் கணக்கிடும் உபகரணங்களும் அத்துடன் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட மென்பொருள் விடயத்துக்கேற்ப அத்தகைய உபகரணங்களை கொள்ளலின் அல்லது உருவாக்குவதன் செலவின் மீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து சதவீதப்படி ;*

(ii) *அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் அல்லது தளபாடம், கொள்ளலின் செலவின் மீது ஆண்டொன்றுக்கு இருபது சதவீதப்படி;*

(iii) *மேலே* (i) *ஆம்* (ii) *ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்படாத வேறு ஏதேனும் பொறி அல்லது உபகரணம் அத்துடன் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட அல்லது பொருத்தி உருவாக்கப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி, கொள்ளலின் அல்லது பொருத்தி உருவாக்கலின் செலவின் மீது ஆண்டொன்றுக்கு பன்னிரண்டரைச் சதவீதப்படி ;*

(iv) *அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட எவையேனும் உருவற்ற சொத்துக்கள் (நல்லெண்ணத்தைத் தவிர) கொள்ளலின் செலவின்மீது ஆண்டொன்றுக்கு பத்துச் சதவீதப்படி ;*

(v) *அத்தகைய சொத்துவத்தின் காலப் பகுதியின்போது அத்தகைய ஆளினால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது அத்தகைய சொத்துக்களை நிர்மாணித்துள்ள ஆளொருவரிட மிருந்து கொள்ளப்பட்ட ஏதேனும் பாலம், புகையிரதம், நீர்த் தேக்கம், மின்சாரம் அல்லது தண்ணீர் பகிர்ந்தளிப்புக்குழாய் மற்றும் வரிவீதிகள், விடயத்திற்கேற்ப நிர்மாணச் செலவின் மீது அல்லது கொள்ளற்செலவின் மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றிலிரண்டு சதவீதப்படி ;*

(vi) *1978 ஆம் ஆண் டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட வாணிபக்கூறொன்றாக அல்லது ஹோட்டல் கட்டிடமொன்றாகப் பயன் படுத்தப்படுவதற்கென நிர்மாணிக்கப் பட்ட ஏதேனும் தகைமை பெற்ற கட்டிடம் அல்லது கூட்டாட்சி ஆதனமொன்றின் ஏதேனும் கூறு (ஹோட்டல் கட்டிடத் தொகுதியொன்று உட்பட) அல்லது அத்தகைய கட்டிடங்களை ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்தியுள்ள ஆளொருவரிட மிருந்து கொள்ளப்பட்ட கைத்தொழிற் கட்டிடம் அல்லது கைத்தொழிற் கட்டி டத் தொகுதி, விடயத்திற்கேற்ப நிர்மா ணச் செலவின்மீது அல்லது கொள்ள லின் செலவின்மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றிலிரண்டு சதவீதப்படி :*

*ஆயினும், உட்பந்திகள்* (i), (ii), (iii), (iv), (v) *அல்லதுஇப்பந்தி என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட எந்த மூலதனச் சொத்து தொடர்பில் முற்போந்த வரிமதிப்பீட்டாண்டுகளில் மதிப்பிறக் கத்துக்கென அளிக்கப்பட்ட விடு தொகைகள், ஆளொருவரால் அத்த கைய மூலதனச் சொத்தை விடயத்திற் கேற்ப கொள்ளுவதற்கான செலவுக்கு, அல்லது நிர்மாணிப்பதற்கான அல் லது பொருத்தி உருவாக்குவதற்கான செலவுக்குச் சமமானதாயிருக்கின் றதோ அந்த மூலதனச் செலவு தொடர் பில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடு களின் கீழ் அத்தகைய ஆளுக்கு கழிப்ப னவு எதுவும் அனுமதிக்கப்படுதலா காது ;*

(ஈ) அவ்வுட்பிரிவின் (இஇ) என்னும் பந்தியில் "2002, ஏப்பிறல், 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(உ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்ளுவதற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்ளுவதற்கான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஊ) அவ்வுட்பந்தியின் (ஊ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :

ஆயின், மேலும், 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு மேலே (ii)ஆம் உட்பந்திக்கான காப்பு வாசகங்கள் எவையேனும் வளவுகளை வாடகைக்கு விடும் வியாபாரத்துக்கு ஏற்புடையவையாதல் வேண்டும்.";

(எ) (i) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "அறவிடமுடியாக் கடன்களுக்குச் சமமான" என்னும் சொற்களுக்குப் பதி லாக, "அத்தகைய ஆளினால் கடன் அடிப்படையில் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலைக் குறிக்கும் அறவிடமுடியாக் கடன்களுக்குச் சமமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில், "வரவுகளாகக் கருதப்படுதல் வேண்டும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரவுகளாகக் கருதப்படு

தல் வேண்டும் என்பதுடன் இக்காப்பு வாசகத்தின் நோக்கத்திற்காக அறவிடப் பட்ட பணத்தொகைகள் கழிப்பனவொன் றாக முன்னர் அனுமதிக்கப்பட்ட ஐயக்கட னாக ஏதேனும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அத்தகைய காலப்பகுதியின் கடைசித் தேதியன்றுள்ளவாறு ஏதேனும் கழிப்பனவை உள்ளடக்குவதாகக் கருதப் படுதலும் வேண்டும், ";

(ஏ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவ தன் மூலமும் :—

" (iஅ) இச்சட்டத்தின் அத்தியாயம் XIV என்பதன் கீழ் வருமானவரியின் கழிப்பனவின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்திக்கான காப்பு வாசகத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான அனுகூலத்தின் பெறுமதி, அவரால் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள நிறைவேற்று அலுவலர் ஒருவரின் அல்லது அத்தகைய ஒழுங்கமைப் பின் நிறைவேற்று அலுவலர் அல் லாத பணிப்பாளர் ஒருவரின் ஊழியத்தில் உள்ளடக்கப்பட்டிருந் தாலன்றி பகுதியளவில் அவரது வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர்தொழிலின் அல்லது வாழ்க் கைத்தொழிலின் நோக்கங்களுக்காக வும் பகுதியளவில் அவரது வீட்டு உபயோகத்தின் அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் பயன்படுத் தப்பட்ட வாகனமொன்று தொடர் பில் உறப்பட்ட செலவுகள் தொடர் பாக ;

(iஆ) வாகனமொன்று அத்தகைய ஆளின் எவரேனும் ஊழியருக்கு அல்லது நிறைவேற்று அலுவலர் அல்லாத எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது ஊழியர் ஒருவராக அல்லாத ஆனால் அவ்வாளினால் கொண்டு நடாத்தப்படும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் சேவைகள் புரியும் வேறு எவரேனும் தனியாளுக்கு வழங்கப்பட்ட முதலாவது வாகனமாக இல்லாவிடின், விடயத்திற்கேற்ப அத்தகைய ஊழியருக்கு, நிறைவேற்று அலுவலர் அல்லாத பணிப்பாளருக்கு அல்லது அத்தகைய வேறு தனியாளுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வாகனம் வழங்கப்படுமிடத்து அவ்வாகனம் தொடர்பில் உறப்பட்ட செலவுகள் தொடர்பாக ;

(iஇ) வாகனமொன்று, அத்தகைய ஆளின் ஊழியர் ஒருவராக அல்லாதவரும் அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் வர்த்தகத்திற்கு, வியாபாரத்திற்கு, உயர் தொழிலுக்கு அல்லது வாழ்க்கைத் தொழிலுக்கு எவையேனும் சேவைகளைப் புரியாதவருமான வேறு எவரேனும் ஆளுக்கு வழங்கப்படுமிடத்து அத்தகைய வாகனம் தொடர்பில் உறப்படட செலவுகள் தொடர்பாக ;

(iஈ) அத்தகைய ஆளின் ஊழியர் ஒருவருக்குரிய வாகனமொன்றை ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்பட்டவாறு வியாபாரம் சாராத நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் அனுகூலத்தின் பெறுமதி அத்தியாயம் XIV என்பதன் கீழ் வருமான வரியின் கழிப்பனவின் நோக்கங்களுக்கு

அத்தகைய ஊழியரின் ஊதியத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலன்றி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி செலவீடு செய்யப் பட்ட தொகை அத்தகைய தொழில் தருநரால் கொண்டு நடாத்தப்படும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் அனுமதிக் கப்படற்பாலதான பிரயாணச் செலவுகள் மீதான செலவை மாத்தி ரம் குறித்தால் அத்தகைய வாகனத் தின் மீதான ஏதேனும் அத்தகைய செலவீனங்களைக் கோருவதற்குத் தொழில் தருநரால் அனுமதியளிக் கப்பட்ட எவரேனும் அத்தகைய ஊழியருக்கு சொந்தமான வாகனத் தின் மீதான மீளளிப்பு செலவினத் தின் மீதான செலவீடு தொடர்பில் உறப்பட்ட செலவுகள் தொடர்பாக ; உட்பந்திகள் (1அ), (1ஆ) அத்துடன் (1இ) என்பவற்றின் நோக்கங்களுக் காக "உறப்பட்ட செலவுகள்" அவ் வாகனம் தொடர்பிலான ஏதேனும் குத்தகை வாடகையை அல்லது வேறு வாடகைக் கொடுப்பனவை அல்லது அத்தகைய வாகனத்தின் கொள்ளலின் அல்லது கொள்ளலின் நிதி யளிப்புச் செலவை உள்ளடக்க மாட்டாது.

(ஐ) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியில், "குவியற் பணத் தொகைக் கொடுப்பன வின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முற்பணக் கொடுப்பனவொன்றல்லாத குவியற் பணத்தொகைக் கொடுப்பனவின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஒ) அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்தியில், "செலுத்தப்பட்ட" என்பதற்குப் பதிலாக,

"2004, மாச்சு 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "எவரேனும் ஆள்" என்னும் சொற்களுக்கும், "தொழிலின் இலாபங்களையும் வருமானங்களையும்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, "(3அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக எவரேனும் ஆள்" என்னும் சொற்களையும், "தொழிலைக் கொண்டு நடாத்துவதில் அல்லது பிரயோகிப்பதில் இலாபங்களும் வருமானங்களையும் (அத்தகைய இலாபங்களையும் வருமானமும் முழுமையாக அல்லது பகுதியளவில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பின்)" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3அ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கையுதிர்ப்பொன்று 2004 ஏப்பிறல் 01 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இடம்பெறுமிடத்து அத்தகைய வர்த்தகத்திலிருந்து, வியாபாரத்திலிருந்து, உயர்தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து விடயத்திற்கேற்ப அத்தகைய பெறுகையை அல்லது செலவினத்தைக் கணிப்பிடுகையில் கையுதிர்ப்பின் மொத்த வரும்படிகள் கணக்கிற் கொள்ளப்படுதல் வேண்டும் ";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் " (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக," (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் " (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும்

பந்தியின்கீழ் அல்லது (ஆஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தட்டு முட்டுச் சாமான்கள், பொருட்கள் அல்லது சாதனமென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தட்டுமுட்டுச் சாமான்கள், பொருட்கள், சாதனம் அல்லது ஏதேனும் பாலம், புகையிரம், நீர்த்தேக்கம், மின்சாரம் அல்லது தண்ணீர் பகிர்ந்தளிப்புக் குழாய்கள், வரிவீதிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) பந்தி (ஊ) என்பதன் (iii) ஆம் உட்பந்தியில் "14(xv) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பெனிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்த வியாபாரத்தின் சொத்துக்களைக் கொள்ளுவதற்கென பிரதானமாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) பந்தி (ஊ) என்பதன் (iv) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (v) குத்தகைக்கு விடும் வியாபாரத்தில் குத்தகைக் கையிருப்பின் ஒரு பாகமாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சொத்து, ஒன்றில் அத்தகைய சொத்தை குத்தகைக்குக் கையிருப்பிலிருந்து அன்றேல் அத்தகைய கையிருப்பை குத்தகை பெறுநருக்குக் கைமாற்றுவதன்மூலம் பின்னராக கையுதிர்க்கப்படுமிடத்து, அத்தகைய கைமாற்றத்தின் நேரத்தி லுள்ளவாறு அத்தகைய சொத்தின் சந்தைப் பெறுமதியானது, அத்தகைய வியாபாரத்திலிருந்து இலாபங்களை அல்லது வருமானங்களைக் கணிப் பிடுகையில் விடயத்திற்கேற்ப பெறப்படற்பாலதான அல்லது பெறப்பட்ட மொத்த வாடகைகள், பெறப்பட்ட முற்

பணக் கொடுப்பனவுகள், முன்பதாகவே தீர்த்தற் கட்டணங்கள் மற்றும் இதனையொத்த வேறு எல்லாப் பெறுதிகளும் உட்பட அத்தகைய குத்தகை உடன்படிக்கையின்கீழ் எல்லாப் பெறுதிகளும் வரிவிதிக்கப்படற்பாலதான பெறுகைகளாகக் கருதப்பட்டுள்ளன என வரிமதிப்பீட்டாளர் திருப்தியுறும் வகையில் அத்தகைய குத்தகை கொடுநர் எண்பித்தாலன்றி குத்தகை கொடுநரின் அத்தகைய வர்த்தகத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்து பெறுகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(vi) ஆளொருவர் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் சொத்தொன்றைப் பெற்றுள்ளவிடத்தும் அத்துடன் இயைபான குத்தகை வாடகைகள் ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் ஒன்றில் முழுமையாகவோ அன்றேல் பகுதியளவிலோ, உறப்பட்ட செலவினமாக அத்தகைய ஆளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சொத்தின் கையுதிர்ப்பினின்று எழும் பெறுகைகள், அத்தகைய ஆளினால் அது நேரடியாகவோ நியமத்தர் ஒருவர் ஊடாகவோ கொள்ளப்பட்ட பின்னர் அத்தகைய சொத்தின்மீது செலுத்தப்பட்ட குத்தகை வாடகைகளைத் தவிர கொள்ளலின் செலவு எதனையும் கழித்து, அத்தகைய குத்தகை பெறுநரின் அத்தகைய வர்த்தகத்திலிருந்து, வியாபாரத்திலிருந்து, உயர்தொழிலிலிருந்து, அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து பெறுகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(vii) குத்தகைப் பெறுநர் எவரும் ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத்

தொழிலில் அவரால் பயன்படுத்தப் பட்ட ஏதேனும் சொத்தைக் கொள்ளு மிடத்து அத்தகைய கொள்ளலானது இப்பிரிவின்கீழ் ஏதேனும் மதிப்பிறக்க விடுதொகைக்குத் தகைமைபெறும் கொள்ளலொன்றாதலாகாது என்பதுடன், அத்தகைய சொத்து அத்தகைய குத்தகைப் பெறுநரால் அத்தகைய குத்தகை உடன்படிக்கையின்கீழ் அத்தகைய சொத்தின் மூலதனப் பெறுமதியின் மீள்கொடுப்பனவின் அளவுக்கு எந்தச் சொத்தின்மீது மதிப்பிறக்கம் அளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சொத்தொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில், "வருமானமாகக் கருதப்படாவிடில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வர்த்தகத்திலிருந்து, வியாபாரத்திலிருந்து, உயர் தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து பெறுகையொன்றாகக் கருதப்படாவிடில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ச) நாலாம் பிரிவின் கருத்தெல்லைக்குள் அத்தகைய ஊழியரின் ஊழியத்திலிருந்து இலாபங்களில் சேர்க்கப் பட்டுள்ள அத்தகைய வதிவிடத்தின் வாடகைப் பெறுமதிக்கு மேலாக அத்தகைய ஆளின் எவரேனும் ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின்

*வாழ்க்கைத்துணைக்கு, பிள்ளைக்கு அல்லது பெற்றோருக்கு ஏதேனும் வதிவிடத்தை வழங்குவதில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட —*

(i) *நிறைவேற்று அலுவலர் ஒருவர் உட்பட ஆனால் எவரேனும் பணிப்பாளர் அல்லது சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் புறநீங்கலாக எவரேனும் ஊழியர் தொடர்பாக ஏதேனும் செலவினத்தின் மிகையின் அரைவாசி ;* அத்துடன்

(ii) *ஒரு பணிப்பாளரான அல்லது சிரேஷ்ட நிறைவேற்று அலுவலரான எவரேனும் ஊழியர் தொடர்பில் (மாதமொன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறும் அலுவலரொருவர்) ஏதேனும் செலவின் மிகையின் நான்கின் மூன்று பங்கு ;";*

*இப்பந்தியின் நோக்கங்களுக்கு "செலவினம்" என்பது தொழில்தருநரால் நேரடியாக உறப்பட்டதாயினுஞ்சரி அல்லது மறைமுகமாக உறப்பட்டதாயினுஞ்சரி நேரடியாகவும் குறித்துரைக்கப்பட்டவாறும் அத்தகைய வதிவிடம் தொடர்பிலான வாடகையை, குத்தகை வாடகையை, வீத வரிகளை, திருத்தங்கள் அத்துடன் பேணல் மற்றும் வேறு செலவுகளை உள்ளடக்குதல் வேண்டும்.";*

(இ) *அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில், "(ஞ) அத்தகைய ஆளினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஞ) 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் எவரே*

னும் ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடல் உடன்படிக்கை யின்கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகை தொடர்பில் அத்தகைய ஆளி னால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(ஞஞ) 2004 ஏப்பிறல் 1 ஆந் தேதி யன்று அல்லது அதன்பின் னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டில் ஆள் ஒருவ ரால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் நிதி குத்தகைக்கு விடல் உடன்படிக்கையின்கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகை தொடர்பில்,

(i) பிரிவு 23இன் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட துணையுறுப்புகள், அத்துடன் மென் பொருள் அத்துடன் வேறு கணிக்கும் உபகரணம் அல்லது கணக் கிடும் உபகரணம் உட்பட ஏதேனும் மோட்டார் வாகன தளபாடம், பொறி, பொறித் தொகுதி அல்லது தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் கணக்கிடும் உபகரணம் என் பன தவிர வே0று உபகரணம் என்பன தொடர்பில் அத்த கைய உடன்படிக்கையின் கீழ் மொத்த வாடகையின் ஐந் தில் ஒன்றை விஞ்சுகின்ற அத்தகைய பாகம் ;

(ii) *பிரிவு 23 இன் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவாறு துணையுறுப்புக ளும் மென்பொருளும் உட் பட ஏதேனும் தொழில்நுட்ப வியல் உபகரணங்களும் கணக்கிடு உபகரணங்களும் தொடர்பில் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் நாலி லொன்றை விஞ்சுகின்ற அத்தகைய பாகம்*";

(உ) (i) *அவ்வுட்பிரிவின் –*

(i) *'ண' என்னும் பந்தியை 'ட' என்னும் பந்தியாகவும், (த) என்னும் பந்தியை 'ண' என்னும் பந்தியாகவும் மீள இலக்கமிடுவ தன் மூலமும்* ;

(ii) *மீள இலக்கமிடப்பட்ட 'ண' என்னும் பந்தியில் "என்று பொருள்படும்" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக "பொருள்படும்"; "அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.*

(ஊ) *அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்* :–

"(த) *அத்தகைய ஆளினால் எவரேனும் ஊழியருக்கு அத்தகைய ஊழிய ரின் வதிவிடத்தில் பயன்படுத் தப்படுவதற்காக வழங்கப்பட்ட ஏதேனும் சொத்து தொடர்பிலான ஏதேனும் செலவீடு அல்லது வெளியீடு* ;

(ப) அத்தகைய ஆளினால் எவரேனும் ஊழியருக்கு அத்தகைய ஆதனத்தைக் கொடுக்கும் நேரத்தில் சந்தைப் பெறுமதியிலும் குறைவான ஒரு விலையில் கொடுக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பிலான ஏதேனும் செலவீடு அல்லது வெளியீடு.

(ம) எவரேனும் ஊழியருக்கு அளிக்கப்பட்டதும் பின்னர் அறவிடப்பட முடியாத கடனாக அத்தகைய ஆளினால் பதிவழிக்கப்பட்டதுமான ஏதேனும், கடன் வேறு முற்பணம் அல்லது கடன்வசதி தொடர்பிலான ஏதேனும் செலவினம் அல்லது வெளியீடு."

(2) இரண்டாம் உட்பிரிவில் "(அ) என்னும் பந்தியிலும் (ஆ) என்னும் பந்தியிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (ஆஆ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"உட்பிரிவுகள் (1அ) அத்துடன் (1ஆ) என்பதன் நோக்கங்களுக்காக "முதனிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்" என்பது அத்தகைய பிணையம், உண்டியல் அல்லது முறி ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நேரத்தில் எவரேனும் முதனிலை வணிகரால், வழங்கு

*பவராலான ஏதேனும் தள்ளுபடிக்கு அல்லது வட்டிக் கொடுப்பனவுக்கு அமைய (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின் அல்லது திறைசேரிமுறியின் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலின் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையின் கொள்வனவு என்று பொருள்படும்."*

*(2) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—*

*"(1இ) எவரேனும் ஆளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் பின்வருவனவற்றை உள்ளடக்க மாட்டாது —*

*(அ) எந்த அரசாங்க நிறுவனத்திடமிருந்து அத்தியாயம்* XVI*ஆ என்னும் அத்தியா யத்திற்கிணங்க 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வரு மானவரி கழிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் அரசாங்க நிறுவனத்திடமி ருந்து -*

(i) *அத்தகைய வெகுமதியின் கொடுப்ப னவுக்கான ஏதேனும் திட்டத்தின் கீழ் ஒரு தகவல் தருபவராக அத்தகைய ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் வெகுமதியை; அல்லது*

(ii) *அத்தகைய தண்டப்பணத்தின் பங் கைப் பகிர்ந்தளிப்பதற்கான ஏதே னும் திட்டத்தின்கீழ் அத்தகைய ஆளி னால் பெறப்பட்ட தண்டப் பணத் தின் பங்கொன்று.*

*(ஆ) பிரிவு 132அ இல் கீழ் வரி கழிக்கப்பட்ட தான ஏதேனும் லொத்தர் ஏதேனும் பிரிவு அல்லது பந்தயம் அல்லது சூதாட்டத் திலிருந்தான பெறுகைகள் ; அத்துடன்*

(இ) அரசாங்கத்திற்கு அல்லது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான எந்த நட்ட ஈட்டிலிருந்து 33 ஆம் பிரிவின் கீழ் வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நட்டஈட்டின் மீது பெறப்பட்ட வட்டி ”;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியில் “2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம்;

“(அஅஅ) பிரிவு 23இன்கீழ் கழிப்பனவு செய்யப்படாததும் செலுத்தப்படற்பாலதான அல்லது செலுத்தப்பட்ட தொகையின் அடிப்படையில் இப் பிரிவின் கீழ் கழிப்பனவொன்றாக முன்னர் அனுமதிக்கப்படாத தொகையுமாகிய ஆண்டுத்தொகை நிலவாடகை, அரசுரிமைப்பணம் அல்லது வட்டி என்ற வகையில் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் ;

ஆயினும் —

(i) பணம் பெறுநர் அத்தகைய கொடுப்பனவுக்கு இலங்கையிலுள்ள அத்தகைய ஆளின் பெயர், முகவரி, வருமானவரிக் கோப்பிலக்கம் (ஏதுமிருப்பின்) என்பன அடங்கிய செல்லுபடியான பற்றுச்சீட்டொன்றை

வழங்கியுள்ளார் என அல்லது அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது செய்யப்படும் நேரத்தில் இச்சட்டத்தின் கீழ் வரிக் கழிப்பனவு செய்யப்பட்டுள்ளது என வரிமதிப்பீட்டாளர் திருப்தியுற்றாலன்றி செலுத்தப்பட்ட அத்தகைய பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது ;

(ii) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்பட்டதும் இவ்வுட்பிரிவின் கீழ் கழிக்கப்படற்பாலதுமான ஏதேனும் அத்தகைய பணத்தொகை அவ்வாண்டிற்கான மொத்த நியதிச்சட்ட வருமானத்தை விஞ்சுமிடத்து இப்பிரிவின் நோக்கங்களுக்கு மிகையானது அவ்வாண்டின்போது வர்த்தகத்தில் கூறப்பட்ட நட்டத்தைப்போன்று அதேமுறையில் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) ஏதேனும் பணத்தொகை அத்தகைய ஆளினால் ஆண்டுத்தொகை என்ற வகையில் செலுத்தப்படு மிடத்து —

(அ) பரிமனைப் பணத்தின் அல்லது தாபரிப்பின் கொடுப்பனவு என்றவகையில் நீதிமன்றக் கட்டளையொன்றின் கீழ் ;

(ஆ) முறையாக எழுதி நிறைவேற்றப்பட்ட பிரிவு வாழ்வு உறுதியொன்றின் கீழ் அவரது வாழ்க்கைத்துணைக்கு ; அல்லது

(இ) பணத்தின் அல்லது பணத்தின் பெறுமதியில் முழுக்கிரயத்திற்கு மீளச்செலுத்துகையில்,

அத்தகைய ஆண்டுத்தொகை செலுத்தப்பட்டால் அன்றி அத்தகைய ஆண்டுத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

(iv) *அத்தகைய ஆளினால் வட்டி என்ற வகையில் ஏதேனும் பணத்தொகை செலுத்தப்பட்டவிடத்து அத்தகைய வட்டி -*

(அ) *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் வங்கிக்கு அல்லது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப் பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனிக்கு ; அல்லது*

(ஆ) *இப்பந்தியின் நோக்கங்களுக்கு ஆணையாளர் தலைமையதி பதியால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு,*

*ஏதேனும் சட்ட அல்லது ஒப்பந்தம் கடப்பாட்டின்கீழ் செலுத்தப்பட்டா லன்றி அத்தகைய வட்டி தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப் படுதலாகாது :*

*ஆயின், எவ்வாறாயினும் வட்டியின் அத்தகைய பெறுநர் அத்தகைய வட்டியை இச்சட்டத்தின் கீழ் வருமானமாக வெளிப்படுத்தியுள் ளார் என ஆணையாளர் தலைமை யதிபதி திருப்தியுறுமிடத்து அத்த கைய ஆள் அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவராகக் கருதப்படலாம்.*

*இப்பந்தியின் நோக்கங்களுக்கு "வட்டி" என்னும் சொற்பதம் எந்தக் கடனொன்றின் வரும்படிகள் —*

(i) *வதிவிட நோக்கங்களுக்காக ஏதேனும் வீட்டின் நிர்மாணத் திற்காக அல்லது கொள்வன வுக்காக அல்லது வதிவிட நோக்கங்களுக்காக அத்தகைய ஏதேனும் வீட்டின் நிர்மாணத்*

திற்கான ஏதேனும் இடத்தின் கொள்வனவுக்காக ,

(ii) அவரால் கொண்டுநடாத் தப்படும் அல்லது பிரயோகிக் கப்படும் ஏதேனும் வர்த்தகத் தில், வியாபாரத்தில், உயர் தொழிலில் அல்லது வாழ்க் கைத்தொழிலில்

பயன்படுத்தப்படுகின்றனவோ அந்தக் கடன் ஒன்றின் மீது, செலுத் தப்பட்ட வட்டி என்று பொருள் படும்." ;

(இ) அவ்வுட்பிரிவின் பந்தி (இ) என்பதனை உடனடுத்துக் காணப்படும் "அந்நட்டத் தொகையானது ஒரு இலாப மாக" என்பதிலிருந்து "உள்ள வொரு நட்டத்தொகை" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் விட்டுவிடுவதன் மூலமும் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அவரது மொத்த நியதிச் சட்டமுறையான வருமானத்துக்கு எதி ராக கழிக்க அனுமதிக்கப்பட்டிருக்காததாகவும் உள்ள நட்டத்தொகையின் அத்தகைய பாகமாகும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலாபமொன்றாக இருந் திருப்பின் வரி மதிப்பிடற்பாலதாக இருந்திருப்பதும் விடயத்திற்கேற்ப ஆறு ஆண்டுகளை அல்லது பதினொரு ஆண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப் பகுதிக்குட்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரது மொத்த நியதிச்சட்டமுறையான வருமானத் திற் கெதிராக அனுமதிக்கப்பட்டிராததுமான அவரது மொத்த நியதிச்சட்டமுறையான வருமானத்திற்கெதி ராக கழிக்க அனுமதிக்கப்பட்டிருக்காததாகவும் உள்ள நட் டத்தொகையின் அத்தகைய பாகமாகும் ;" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(உ) பந்தி (ஈ)யின் காப்புவாசகமும், 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகமும் இத்தால் நீக்கப்படுகின்றன.

(ஊ) அவ்வுட்பிரிவின் (உ) என் னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(ஊ) (i) ஏதேனும் வர்த்த கத்தில் வியாபாரத் தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் 2004, ஏப் பிறல் 1 ஆந்தேதி யன்று அல்லது அதன் பின் னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டில் அந்த ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றின் எந்தத் தொகை (ஏதேனும் மூலதன நட்டத்தைத் தவிர) இலாபமொன்றாக இருந்திருப்பின் இப்பிரிவின் கீழ் முன்னர் கழிப்பனவு செய்யப்பட்டிராததும் முந்திய ஆண் டொன்றிலிருந்து முன் கொணரப்பட்ட அத்த கைய ஏதேனும் நட்டம் உட்பட (2) ஆம் உட் பிரிவின் (அஅஅ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் கருதப்பட்ட நட்டம் அத்துடன் அத்தகைய நட்டத் தொகை ஒரு வர்த்தகத்தில், வியாபாரத் தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலினின்று எழுகின்ற இலாபங்களை ஆய்ந்தறிவதற்கு இச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறை யில் ஆய்ந்தறியப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்

பட்ட வருமானம் பற்றிய விவரத் திரட்டில் உரிமைகோரப்பட்டு அந்த ஆண்டிற்கான மொத்த நியதிச் சட்ட முறையான வருமானத்தின் முப்பத் தைந்து சதவீதமான உச்சவரம்பு வரை, அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கணக்குக் கூற்றொன்றினால் ஆதாரப்படுத் தப்படுமிடத்து, அந்த நட்டமொன்றின் தொகை அத்துடன் கழிக்கப்படமுடியாத நட்டம், அடுத்துவரும் ஆண்டின் வரிமதிப் பீட்டின்போதும் பின் னரும், முன்கொண ரப் படலாம் ;

ஆயினும், எவ்வாறாயினும், –

(i) இச்சட்டத்தின் 38ஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பெனியின் பங்குகளை உரிமைகளை அல்லது ஆணைச் சீட்டுக்களைக் கையுதிர்ப்பதில் உறப்பட்ட நட்டம் எதுவும் இப்பந்தியின் கீழ் கழிக்கப்படற்பாலதல்ல ;

(ii) ஒரு தனியாளின் விடயத்தில் அத்தகைய தனியாளின் இறப்பு சம்பவித்த அல்லது ஒரு கம்பெனியின் அல்லது வேறு ஆட்கள் குழுவின் விடயத்தில் ஒடுப்பு ஏற்பட்ட வரிமதிப்பீட்டாண்டுக்கு அப்பால் எந்த நட்டமும் முன் கொணரப்படுதலாகாது;

(iii) ஆள் ஒருவர், தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் கடனிறுக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து

*அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள விடத்து, விடயத்துக்கேற்ப, வங்குரோத்து நிலை அல்லது கடனிறுக்க வகையற்ற நிலை ஏற்படமுன்னர் உறப்பட்ட நட்டம், எழும் வருமானத்திலிருந்து அத்தேதி யின் பின்னர் கழிக்கப்படுதலாகாது ;*

(iv) *சொத்தறுதியான அல்லது சொத்தறுதி யற்ற வகையாக தவிர, சொத்தாண்மை மாற்றம் ஏற்பட்டுள்ள ஒரு கம்பெனியால் உறப்பட்ட நட்டம் எதுவும், நட்டம் உறப் பட்டதான கம்பெனியின் அத்தகைய வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் நியதிச்சட்ட வருமானத்துக்கெதிராத லன்றி கழிக்கப்படுதலாகாது.*

*இப்பந்தியின் நோக்கத்துக்காக கம்பெனியின் வழங்கப்பட்ட பங்குமூலதனத்தின் மூன்றிலொன் றுக்கு மேற்பட்ட நட்டம் எந்த வரிமதிப்பீட்டாண் டில் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் நேரத்தில் அத்தகைய பங்கு மூல தனத்தை வைத்திருக்காத ஆட்களினால் நேரடியாக அல்லது நியமத்தர்கள் மூலம் எந்த வரிமதிப் பீட்டாண்டில் கழிப்பனவுக்கான கோரிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அவ்வரிமதிப்பீட்டாண்டின் எந்த நேரத்திலும் கம்பனியொன்றின் சொத்து வத்தில் மாற்றமொன்று நிகழ்ந்ததாகக் கருதப்படு கின்றது.*

*(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—*

*“(2அ) இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ), (ஈ) அத்துடன் (உ) என்பவற்றின் ஏற்பாடுகள் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியலிருந்து பயனுடையனவாத லாகாது.”.*

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் "(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2 ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) (ஈ) அல்லது (ஊ) என்னும் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

**17**. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :– *முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) (i) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் ஒரு இலட்சத்து நாற்பத்திநாலாயிரம் ரூபா விடுதொகையொன்று; அல்லது

(ii) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா விடுதொகையொன்று; அல்லது

(iii) 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் மூன்று இலட்சம் ரூபா விடுதொகையொன்று.".

**18**. 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,–

(அ) அவ்வுட்பிரின் (ஆ) என்னும் பந்தியின் (VIII) ஆம் உட்பந்தியில் "அளிக்கப்பட்ட நன்கொடையொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அளிக்கப்பட்ட நன்கொடையொன்று" :

ஆயின், இரண்டு மில்லியன் ரூபாவிலும் அதிகமாயுள்ளவாறான, 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட பணம் தவிர்ந்த வேறுவகையான கொடையின் (ஏதேனுமிருப்பின்), அத்தகைய பாகம் தகைமைபெறும் கொடுப்பனவொன்றை உள்ளடக்காததாகக் கருதப் படல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங் களையும் இடுவதன்மூலமும்,

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் "அத்தகைய உதவு தொகைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உதவுத்தொகைகள் :

ஆயினும், 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல் லது அதன் பின்னர் செய்யப்பட்ட அத்தகைய உதவுத் தொகையானது அத்தகைய வேதநாதிகளின் 12 விகிதாசாரத்தை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய மிகை தகைமைபெறும் கொடுப்பனவுகளை அடக்காத தாகக் கருதப்படல் வேண்டும்." என்னும் சொற்களை யும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்,

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்,

(i) (அ) 2004, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப் படுகின்ற (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (எ) மற்றும் (ஏ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த எல்லாக் கொடுப் பனவுகளும் ; அத்துடன்

(ஆ) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப் பட்ட அல்லது அவரால் செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ), (உ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) வில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த எல்லாக் கொடுப்பனவுக்கும்,

அத்தகைய மதிப்பிடற்பாலதான வருமானத்தின்பின் மூன்றி லொன்றை அல்லது இருபத்தையாயிரம் ரூபா இவற்றுள் எது குறைந்ததோ அதை விஞ்சுதலாகாது.

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (V) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் –

"(V), (அ) 2004, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்டதும் (அ), (இ), (ஈ), (உ), (ஊ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டது மான எல்லா தகைமை பெறும் கொடுப்பனவு களினதும் தொடர்பில் கூட்டுமொத்தம் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுத லாகாது ; அத்துடன்

(ஆ) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று செய்யப்பட் டதும் (2) ஆம் உட்பிரிவின் (அ), (உ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப் பட்டதுமான தகைமைபெறும் கொடுப்பனவு களினதும் தொடர்பில் கூட்டுமொத்தம் எழுபத்தையாயிரம் ரூபாவை அல்லது அத்த கைய மதிப்பிடத்தக்க வருமானத்தில் மூன்றில் ஒன்றை அவற்றுள் எது குறைவானதோ அதை விஞ்சுதலாகாது.

(3) அப்பிரிவின் (6அ) என்னும் உட்பிரிவில் "(2) ஆம் உட்பிரிவின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தகைமை பெறும் கொடுப்பனவு" என்னும் சொற்களுக்குப்

பதிலாக, "(2) ஆம் உட்பிரிவின் (ஐ) அல்லது (ஒ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்துடன் 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டில் 2003, யூன் 30 ஆம் தேதி வரையிலும் அதனை உள்ளடக்கியதுமான காலப்பகுதிக்கு அத்தகைய இலாபத்தினதும் வருமானத்தினதும் மீது இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ, 38ஆ, 38இ அத்துடன் 38ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவு 38அ, பிரிவு 38ஆ, பிரிவு 38இ அத்துடன் பிரிவு 38ஈ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

*"கரைக்கப்பாற்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல் எதனிலும் இருந்தெழும் ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறின் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீதான வருமான வரிவீதம்.*

38அ. கரைக்கப்பாற்பட்ட வெளிநாட்டு நாணக் கொடுக்கல் வாங்கல் எதனிலுமிருந்தெழும் ஏதேனும் வெளிநாட்டு வங்கித்தொழிற்கூறின் இலாபங்களும் வருமானமும் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான வீதப்படி வருமானவரிக்கு ஆளாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற்கூறு வேறேதேனும் வெளிநாட்டு வங்கித்தொழிற் கூறுடன் செய்துகொள்ளும் ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல் "கரைக்கப்பாற்பட்ட கொடுக்கல் வாங்கல்" ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*குறித்த சில ஏற்றுமதிகளிலிருந்து சரக்கனுப்புபவருக்கு அல்லது*

38ஆ. சரக்கனுப்பும் அடிப்படையொன்றில் இலங்கைக்குக் கொண்டுவரப்படும் பொருட்களாகிய —

(அ) இலங்கையில் அகழப்படாத எவையேனும் அருங்கற்கள் அல்லது உலோகங்கள் ;

சரக்குப் பெறுபவருக்கு இலங்கையில் எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீதான வருமான வரிவீதம்.

(ஆ) எவையேனும் பெற்றோலிய வாயு அல்லது பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் ; அல்லது

(இ) அத்தகைய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்து நாட்டிற்குத் திரளக் கூடிய சாத்தியமுள்ள வெளிநாட்டு நாணய நலன்களைக் கருத்திற்கொண்டு, இப்பந்தியின் நோக்கத்திற்காக அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உற்பத்திப் பொருட்கள்,

என்பவற்றின் ஏற்றுமதியிலிருந்தும் அத்தகைய பண்டங்களை ஏதேனும் உற்பத்தி முறைவழிகளுக்கு உட்படுத்தப்படாமல் மீள் ஏற்றுமதியிலிருந்தும் சரக்கனுப்புபவருக்கு அல்லது சரக்குப் பெறுநருக்கு எழும் இலாபங்களும் வருமானமும் 2004 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் தரப் பட்டுள்ள தோதான வீதப்படி வருமான வரிக்கு ஆளாதல் வேண்டும்.

அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட குறித்தசில பொறுப்பு முயற்சிகளிலிருந்தெழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீதான வருமான வரிவீதம்.

38இ. மீள் ஏற்றுமதிக்கென இலங்கைக்குக் கொண்டுவரப்படும் பண்டங்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் களஞ்சிய வசதிகளின் தொழிற்பாட்டிற்கும் பேணலுக்குமென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளுக்கு எழும் இலாபங்களும் வருமானமும் 2004 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான வீதப்படி வருமானவரிக்கு ஆளாதல் வேண்டும்.

ஏதேனும் பங்கின் அல்லது ஓர் ஆணையின் விற்பனை மீதான வருமான வரிவீதம்.

38ஈ. இரண்டாயிரத்துநாலு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் பங்கிற்கான அல்லது போனஸ் பங்கொன்றிற்கான உரிமையொன்று உட்பட ஏதேனும் பங்கின் அல்லது ஆணையின் விற்பனையிலிருந்து (ஒரு கூறு நம்பிக்கை அல்லது பரஸ்பர நிதியம் தவிர்ந்த) அத்தகைய விற்பனை மூலம் அத்தகைய ஆளுக்குத் திரளும் அல்லது எழும் இலாபங்கள்

அத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக் குள் இடம் பெற்றிருக்குமிடத்து அத்தகைய ஆளினால் பெறப்படுமிடத்து அல்லது அவருக்குத் திரளு மிடத்து இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணை யில் தரப்பட்டுள்ள தோதான வீதப்படி வரிக்கு ஆளாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு "இலாபங்கள்" என்பது, வருவாய்களை உள்ளடக்கும் என்பதுடன் 23 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதும் அத்தகைய பங்குகளின் கையுதிர்ப்புடனும் அத்தகைய பங்குகளின் கொள்ளலின் செலவுடனும் நேரடித் தொடர்புடையதும் ஏதேனும் செலவை விற்பனை வரும்படிகளிலிருந்து கழிப்பனவு செய்த பின்னர் கணிப்பிடப்படுதலும் வேண்டும். அத்து டன் அத்தகைய நட்டமானது அத்தகைய ஆளினால் இருபத்துநாலு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு வைத்திருக்கப்படக்கூடிய இலாபமொன் றாகவோ வருவாயாகவோ இருந்திருப்பின் இப்பந்தியின்கீழ் வரிக்கு ஆளாயிருந்திருக்கக்கூடிய வாறான அதேமுறையில் கணிப்பிடப்பட்டு பங்கு உரிமைகளின் அல்லது ஆணையின் கையுதிர்ப் பிலிருந்து அவ்வாண்டில் உறப்பட்ட நட்டங்களைக் கழிப்பனவு செய்த பின்னர் அவ்வாண்டிற்கான தேறிய இலாபமாதல் அல்லது வருவாயாதல் வேண்டும் என்பதுடன்,விற்பனையானது வெவ்வேறு தேதிகளில் கொள்ளப்பட்ட அதே கம்பெனியின் பங்குகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய பங்குகளின் செலவு அல்லது சொத்துவத்தின் காலப்பகுதி அத்தகைய பங்கு களின் "முதல் உள்ளே முதல் வெளியே" என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் ஆண்டிற்கான இலாபங்களின் அல்லது வருவாய்களின் மேலான கழிக்கப்படற்பாலதான அத்தகைய நட்டத்தின் மிகை எதுவும் அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்கு முன்னெடுத்துச் செல்லப் படுதலும் இப்பந்தியின்கீழ் தேறிய இலாபங்களை அல்லது வருவாய்களைக் கணிப்பிடுகையில் கழிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.".

**21.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"குறித்தசில பங்கிலா பங்கள் மீதான வருமான வரிவீதம்.*

48அ. ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் (கம்பெனியொன்றைத் தவிர) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 11 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) அத்துடன் (ஏ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தைத் தவிர -

(i) பணமாக அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன்றாக அல்லாமல் ;

(ii) வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப்பட்ட அல்லது வரிவிதிக்கப்படற்பாலதல்லாத வருமானத்திலிருந்து பணமாக அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன்றாக ; அல்லது

(iii) அத்தகைய பங்கிலாபம் 61 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் வரிக்கழிப்பனவொன்றில்லாமல் 11 ஆம் பிரிவின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படாதுள்ளவிடத்து வேறோர் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்களிலிருந்து அத்தகைய கம்பெனி அத்தகைய வரிக் கழிப்பனவுக்கு உரித்துடையதாயினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி ,

2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட

பங்கிலாபமொன்றை உள்ளடக்குமிடத்து அத்தகைய பங்கிலாபத்தின்மீது, இச்சட்டத்திற்கான ஆறாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தோதான வீதத்தில் வரி அறவிடப்படுதல் வேண்டும்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(6) இப்பிரிவின் நோக்கத்திற்கு "விசேட ஊழிய வரிவரவு" என்பது சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) (இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டது நன்மைகள் தவிர்த்து) ஊழிய வருமானம் அத்தனியாளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திற்கு எந்த விகிதாசாரத்தில் அமைந்துள்ளதோ அதே விகிதாசாரத்தில் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனி யாளின் வரிசெலுத்தப்படற்பாலதான வருமானத்தையொத்த பணத்தொகை என்று பொருள்படும் " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் —

"ஆறாம் உட்பிரிவுக்கிணங்க கணிப்பிடப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறாம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட வாறு" என்னும் சொற்களை இடுவதன் மூல மும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) அத்துடன் பந்தி (ஆஆ) என்பவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ஆ) எட்டாம் பிரிவின் பந்தி (அ) அத்துடன் பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய் யப்பட்ட ஆளொருவருக்கு பகிர்ந்தளிக்

*கப்பட்ட ஏதேனும் அத்தகைய பங்கிலாபத்தைத் தவிர ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்த இலாபங்கள் மீது அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் கணிப்பிடப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஆண்டாகிய அந்த வரிமதிப்பீட்டாண்டில் விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றல்லாத அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபத்தின் கூட்டுமொத்தத் தொகையின் பதினைந்து சதவீதத்திற்குச் சமமானதாயிருத்தல் வேண்டும் ;*

(ஆஆ) (i) *எட்டாம் பிரிவின் பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) என்பதன் கீழ் எந்தக் கம்பெனி அல்லது ஆட்களின் குழு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனிக்கு அல்லது ஆட்களின் குழுவுக்கு ; அல்லது*

(ii) *இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்திற்கு,*

*பகிர்ந்தளிக்கப்பட்ட எவையேனும் அத்தகைய பங்கிலாபங்களைத் தவிர, ஏதேனும் வரிமதிப்பிடற்பாலதான ஆண்டில் எந்த இலாபங்கள்மீது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் கணிப்பிடப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று*

அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டாகிய அந்த வரிமதிப்பீட்டாண்டில் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றாக அல்லது பரஸ்பர நிதியமொன்றாக அல்லாத அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபத்தின் கூட்டுமொத்தத் தொகையின் பத்துச் சதவீதத்திற்குச் சமமானதாயிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் வருமானவரி அறவிடப்படற்பாலதாயிருப்பினுஞ்சரி அறவிடற்பாலதல்லாவிடினுஞ்சரி இவ்வுட்பிரிவின்கீழ் வருமான வரியைக் கழிப்பனவு செய்த பின்னர் வேறோர் கம்பெனியால் பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் அல்லது அத்தகைய பங்கிலாபம் பெறுநருக்கு 11 ஆம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட பங்கிலாபம் அல்லது புறநீங்கலாக அத்தகைய கம்பெனியின் இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய கம்பெனியால் வெளிப்படுத்தப்பட்ட மொத்தப் பங்கிலாபத் தொகையின்மீது (i) ஆம் அல்லது (ii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமொன்றல்லாத, வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தின்மீது பத்துசதவீதத்திற்குச் சமமான வருமானவரி செலுத்தப்படற்பால தாதல் வேண்டும்.";

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "(1) ஆம் பந்தியின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(1)ஆம் உட்பிரிவின் (அ)என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :–

"(3) வேறோர் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் தொடர்பில் "மொத்தப் பங்கிலாபத்தின் தொகையானது பெறப்பட்ட பங்கிலாபத்தின் அத்தகைய தொகையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, "2002, மாச்சு 31ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட் பிரிவை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

"(1அ) வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பை அல்லது பரஸ்பர நிதியத்தைத் தவிர) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ;

(அ) எட்டாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியை அல்லது ஆட்களின் வேறு குழு மத்தை ;

(ஆ) இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பை அல்லது பரஸ்பர நிதியத்தைத்,

தவிர, எவரேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்படற்பால தான பங்கிலாபத்தின் மொத்தத் தொகையிலிருந்து அக்கம்பெனியின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்த இலாபங்கள் மீது பத்துச் சதவீதத்திற்குச் சமமானதாகக் கணிப்பிடப்படுகின்றதோ அந்த வருமான வரியை அந்த இலாபங்களிலிருந்து பணமாகவோ அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன்றாகவோ கழிப்பனவு செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான பங்கிலாபங்களுக் கமைய இப்பிரிவின்கீழான வருமான வரி அத்தகைய கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் வருமான வரிவிதிக்கப்படற்பாலதாயிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி அத்தகைய கம்பெனியின் இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இவ்வுட்பிரிவின் கீழ் வருமான வரியின் கழிப்பனவின் பின்னர் வேறோர் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபமும் அத்தகைய பங்கிலாபத்தின் பெறுநருக்கு 11 ஆம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட ஏதேனும் பங்கிலாபமும் அல்லது 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபமும் புறநீங்கலாக 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் மொத்தப் பங்கிலாபத்தின் தொகையிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

வேறோர் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் தொடர்பில், "மொத்தப் பங்கிலாபத்தின் தொகை" பெறப்பட்ட அத்தகைய பங்கிலாபத் தொகையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 72அ எனும் பிரிவாகப் பயன்கொண்டதாதலும் வேண்டும் :—

*"பங்குடைமைகளின் மீது அறவிடப்படற்பாலதானவரி.*

72அ. (1) பிரிவு 72 இல் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பங்குடைமை ஒவ்வொன்றும் 71 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான பிரிபடற்பாலதான இலாபங்களினதும் வேறு இலாபங்களின் மீதும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோர் மதிப்பீட்டாண்டிற்கும் இச்சட்டத்தின் ஆறாம் அட்டவணையில் தரப்பட்டவாறான வேறு வருமானத்தின் கூட்டுமொத்தத் தொகையில் வருமானவரி விதிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரியானது இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய XIII ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக காலாண்டுத் தவணைக் கட்டணங்களில் பங்குடைமையால் செலுத்தப்படல் வேண்டும்.

(2) ஏதேனும் மதீப்பீட்டு ஆண்டிற்காக பிரிபடற்பாலதான இழப்பொன்று இருக்குமிடத்து, வரியானது, அத்தகைய வேறு வருமானத்திலிருந்து அத்தகைய பிரிபடற்பாலதான இழப்பின் ஏதேனும் எதிரீடு செய்யப்படாமல் மற்றைய வருமானத்தின் மொத்தத் தொகையில் அறவிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாகவுள்ளது எப்படியிருப்பினும், மதிப்பீட்டாண்டிற்காக, பங்குடைமையின் இலாபப் பங்கீட்டு வீதத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு பங்காளருக்கும் காட்டப்படக்கூடியவையான, அவ்வாண்டிற்காக

*பங்குடைமையினால் செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்திற்கெதிராக எதிரீடு செய்யப் பட்ட ஏதேனும் தொகையைக் கழித்து, (1)ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட (அறவிடப்பட்ட ஏதேனும் தவணை தவறிய வரி தவிர்ந்த) வரிப் பங்கானது, அத்தகைய இலாபப் பங்கின் மீது அதே மதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய பங்கு டைமையின் அத்தகைய பங்காளரின் வருமான வரிப் பொறுப்பேற்புக்கெதிராகவும் அத்தகைய பங்காளருக்கு காட்டப்படக்கூடியவையான அத்த கைய வரிப்பங்கின் ஏதேனும் மேலதிக பங்கை மீளளிப்பதற்கு அல்லது முன்வைப்பதற்கு உரித் தெதுவுமின்றி அத்தகைய பங்குடைமையிலிருந்து பெற்ற வேறு வருமானத்திற்கெதிராகவும் எதிரீடு செய்யப்படலாம் ;*

*(4) இப்பிரிவின்ஏற்பாடுகளுக்கமைவாக இச் சட்டத்தின் (XIII) ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான செலுத்தப்படற்பாலதும் உரிய தேதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்படாததுமான வரியின் ஏதேனும் காலாண்டுத் தவணைக்கட்டணமானது இச்சட்டத் தின் நோக்கங்களுக்காக தவணை தவறிய வரியொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பது டன், இச்சட்டத்தின் XXII ஆம் அத்தியாயத்தின் கீழ் அறவிடுதல் நடவடிக்கையானது, அத்தகைய தவணை தவறிய வரியை அறவிடுவதற்காக அத்த கைய பங்குடைமையின் எவரேனும் அல்லது எல்லாப் பங்காளர்களுக்கும் எதிராக அவ்வத்தி யாயத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதி யினால் தொடுக்கப்படலாம்.*

*இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "செலுத்தப் படற்பாலதான வரியின் ஏதேனும் காலாண்டுத் தவணைக் கட்டணமானது" அவ்வாண்டிற்கான பிரிபடற்பாலதான இலாபமும் வேறு வருமான மும் பங்குடைமையின் அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானத்தின் விபரங்கள் இல்லாமையின் காரணத்தினால் ஆய்ந்தறிய முடியாது இருக்கு மிடத்து, முற்போந்த ஆண்டினது பிரிபடற்பால தான இலாபத்தினதும் வேறு வருமானத்தினதும் அடிப்படையில் மதிப்பீடுசெய்யப்பட்ட வரித் தொகையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஒரு லட்சத்து" என்பது தொடங்கி "ஆகாது" என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக, -

(அ) 2003, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் ரூபாவையும் ;

(ஆ) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் மூன்று இலட்சம் ரூபாவையும் ;

விஞ்சாததாயிருக்குமிடத்து அத்தகைய வருமானம் வரிவிதிக்கப்படற்பாலதாதல் ஆகாது." எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய கொடுப்பனவுத் தொகையின் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான" எனும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின் ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 97அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 97அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"கம்பெனிகளின் குழுவொன்றின் உறுப்பினர்களிடையேயான குறித்தசில கொடுக்கல் வாங்கல்களைப் புறக்கணிப்பதற்கு வரிமதிப்பீட்டாளர்களுக்குள்ள தத்துவம்.*

97அ. பொருளாதார முக்கியத்துவத்தைக் கொண்டிராத கம்பெனிகள் குழுவின் உறுப்பினர்களிடையேயான ஏதேனும் கொடுக்கல் வாங்கலானது, குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு வரி நன்மையொன்றை அல்லது 29 ஆம் பிரிவின் கீழ் கழிவொன்றாகக் கோரக்கூடியதான, ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட அத்தகைய உறுப்பினர்களின் ஏதேனும் வர்த்தகம் அல்லது வியாபாரத்தில் இழப்பொன்றை ஏற்படுத்தியுள்ளதென வரிமதிப்பீட்டாளர் ஒருவர் அபிப்பிராயப்படு

கின்றவிடத்து, அத்தகைய கொடுக்கல் வாங்கலானது புறக்கணிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இயைபான ஆட்கள் அதற்கிணங்க வரிமதிப்பீடு செய்யப்படுதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "கம்பெனிகள் குழு" என்பது ஒரு தாய்க் கம்பெனியும் எல்லாத் துணைநிலைக் கம்பெனிகளும் என்று பொருள்படும். இதில் தாய்க் கம்பெனியானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைநிலைக் கம்பெனிகளைக் கொண்டிருக்கும். அத்தகைய துணைநிலைக் கம்பெனிகள் ஒன்றால் அத்தகைய துணைநிலையின் பணிப்பாளர்கள் சபையின் அமைப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அல்லது அத்தகைய துணைநிலையின் உரிமைப் பங்கு மூலதனத்தின் பெயரளவிலான பெறுமதியின் அரைப்பங்கிற்கு அதிகமானதைக் கொண்டிருப்பதன் மூலம் தாய்க் கம்பெனியால் கட்டுப்படுத்தப்படுகின்றன.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய உப அத்தியாகத்தை உட்புகுத்துதல்.*

**30.** பின்வரும் புதிய உப அத்தியாயமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 97அ என்னும் பிரிவின் இறுதியில் உட்புகுத்தப்படுகின்றது :—

**ஔ — பெற்றோலிய ஆய்ந்து தேடுதலும் தேடிப் பெறுதலும்**

*பெற்றோலிய மூலவளங்கள் உடன் படிக்கையின் கீழ் பெற்றோலியம் தேடிப் பெறுதல் வியாபாரத்திலிருந்து பெறும் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயித்தல்.*

97ஆ. (1) 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய மூலவளங்கள் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக்காரரொருவராக அல்லது உப ஒப்பந்தக்காரரொருவராக உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டுள்ளவரான ஆளெவரும் அல்லது பங்குடைமை எதுவும், இச்சட்டத்தின் 73 ஆம் பிரிவின் ஏற்பாடு எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விடயத்திற்கேற்ப அத்தகைய ஒப்பந்தத்தின் அல்லது உப ஒப்பந்தத்தின் நடைமுறையின் போது, இலங்கையில் வதிக்கின்றவராகக் கருதப்படல் வேண்டும்.

*(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள ஏதேனும் பெற்றோலிய மூலவளங்கள் உடன்படிக்கையின்கீழ் தேடிப்பெற்ற பெற்றோலி யத்தின் ஏற்றுமதிகளிலிருந்தும் உள்ளூர் விற்பனை களிலிருந்தும் வந்த மொத்த விற்பனையானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக நடைமுறைகளில் அடிப்படையில் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதுடன் 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய மூலவளங்கள் சட்டத்தின்கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் உள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய இருத்த லும் வேண்டும்.*

*(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட் டுள்ள ஏதேனும் பெற்றோலிய மூலவளங்கள் உடன் படிக்கையின்கீழ் பெற்றோலியம் தேடிப் பெறுதல் வியாபாரத்திலிருந்து வரும் இலாபங்களும் வரு மானமும் செலவினத்தின் அதே இனமானது ஒன் றிற்கு மேற்பட்ட தடவை கழிக்கப்படலாகாதென ஏற் பாடு செய்யப்பட்டவாறாக, இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் வேறு அனுமதிக்கத்தகு செலவுகளுக்கு மேலதிகமாகப் பின்வரும் கழிப்பனவுகளை அனு மதித்த பின்னர் நிச்சயிக் கப்படுதல் வேண்டும் —*

*(அ) பெற்றோலிய தொழிற்பாடுகளை நடாத்து வதற்காக சேவை உபஒப்பந்தகாரர்களுக் குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ;*

*(ஆ) பிரிவு 23 இன் கீழ் மதிப்பிறக்கத்திற்கான படி அல்லது புதுப்பித்தல் செலவுக்குப் பதிலாக பெற்றோலிய மூலவளங்களை அறவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொறி, இயந்திரம் அல்லது உபகரணம் எதனதும் கொள்வனைச் செலவின் நூறு சதவிகிதம் அத்தகைய சொத்துக்களின் விற்பனையின்மீது தேறிய ஏதேனும் வரும்படியின் அத்தகைய வியாபாரத்தி லிருந்தான பெறுகைகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;*

*(இ) வட்டிச் செலவுகள் ;*

*(ஈ) ஏதேனும் பெற்றோலிய மூலவளங்கள் உடன் படிக்கையின்கீழ் அறவிடப்பட்ட பெற்றோ லிய மூலவளங்களுக்குச் செலுத்தப்பட்ட*

அரசுரிமைப் பணம் எவ்வாறாயினும், இத் தொகையானது 29 ஆம் பிரிவின்கீழ் கழிப் பனவொன்றாக அனுமதிக்கப்படலாகாது ;

(உ) மேலே (ஆ) எனும் பந்தியின்கீழ் கழிப் பனவொன்று வழங்கப்பட்டிராதவிடத்து மூலதனச் செலவுகள் உட்பட, பெற்றோலிய அபிவிருத்தி மற்றும் உற்பத்தி மீதான எல்லாச் செலவுகளும் ;

(ஊ) முதலாவது வாணிப உற்பத்தி ஆண்டு வரையிலும், அது உட்படவும் ஏதேனும் பெற்றோலிய மூலவளங்கள் உடன்படிக் கையின் கீழ் ஆய்ந்து தேடுதல் கட்டங்களில் உள்ள வெற்றி பெறாத கிணறுகளுக்கான ஆய்ந்து தேடுதலில் ஏதேனும் ஒப்பந்தக் காரரால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும்;

(எ) முதலாவது வாணிப உற்பத்திக்குப் பின்னர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் பெற்றோலிய மூலவளங்கள் உடன்படிக் கையின் கீழ் ஆய்ந்து தேடுதல் கட்டங்க ளில் உள்ள வெற்றிபெறாத கிணறுகளுக்காக ஆய்ந்து தேடுதல் எவரேனும் ஒப்பந்தக்கார ரினால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**31.** 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

“ (1அ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஆள் எவரும் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஏதேனும் உடன் படிக்கையைச் செய்துகொண்டுள்ளதான ஏதேனும் கம்பெனி உட்பட, ஏதேனும் வர்த்தகத்தை, வியாபா ரத்தை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழி லைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்று கின்ற ஆள் எவரும், விடயத்திற்கேற்ப அச்செயற் பாட்டினைப் பதிவுசெய்த அல்லது கூட்டிணைத்த

*அல்லது தொடங்கிய ஒரு வருட காலத்தினுள், ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பதிவு இலக்கமொன்றைப் பெறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளின்மீது இச்சட்டத்தின் கீழ் வரி எதுவும் அறவிடப்படற்பாலதாகாதென்பது எப்படியிருப்பினும் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களையும் ஆவணங்களையும் கொண்டதான விவரத்திரட்டொன்றை 2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டின் இறுதியைத் தொடர்ந்து நவெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் சமர்பித்தலும் வேண்டும்.*

*(1ஆ)(அ) ஆணையாளர் தலைமையதிபதி , (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய எல்லா ஆட்களுக்கும், பெயர், முகவரி, பதிவிலக்கம் மற்றும் அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் விபரங்கள் என்பவற்றைக் கொண்டுள்ள பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.*

*(ஆ) (i) 2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் நிதியாண்டு தொடர்பில் வருமதியான ஏதேனும் வருடாந்த விவரத்திரட்டுடன் சேர்த்து அதன் சார்பில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி தொடர்பில் ;*

*(ii) அத்தகைய கம்பெனியால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முதலாவது வருடாந்த விவரத்திரட்டுடன் சேர்த்து (1) ஆம் உட்பந்தியின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி தொடர்பில்*

*1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணானது எது எப்படியிருப்பினும் அத்தகைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கோப் பிடப்பட்ட வருடாந்த விபரத்திட்டின் முழுமை யான பாகம் ஒன்றாக (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங் கப்பட்ட சான்றிதழைப் பெறுவது கம்பெனிகள் பதிவாளரின் கடமையாதல் வேண்டும்,*

*(இ) பந்தி (ஆ) வின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் ஆணை யாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப் பட்டவாறான தேதியானது அத்தகைய தீர்மா னத்தின்மீது உடனடியாக ஆணையாளர் தலைமையதிபதியினால் கம்பெனிகள் பணிப் பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.*

*(1இ) (அ) இச்சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் இலங்கையில் வதிவுள்ளதாகக் கருதப்படும் கம்பெனி ஒவ் வொன்றும் முறையே ஏப்பிறல் முதல் செத்தெம் பர் வரையிலான காலப்பகுதியின்போதும் ஒற்றோபர் முதல் மாச்சு வரையான காலப்பகுதி யின் போதும் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபங் களின் விபரங்கள் உட்பட ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களின் விபரத் திரட்டொன்றை 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒற்றோபர் 31 மற்றும் ஏப்பிறல் 30 அன்று அல்லது அதன் முன்னர் அரையாண்டு அடிப்படையிலும் அவருக்குச் சமர்ப்பித்தல் வேண் டும். அத்தகைய ஏதேனும் காலப்பகுதி யின்போது பங்கிலாபங்கள் எவையும் வெளிப் படுத்தப்படாத விடத்து, ஒரு "இல்லை" என்னும் விபரத்திரட்டு ஒன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*(ஆ) இலங்கையில் வதிவுள்ளதெனக் கருதப்படாத கம்பெனி ஒவ்வொன்றும், ஒவ்வோர் ஆண்டிலும் முறையே ஏப்பிறல் முதல் செத்தெம்பர் வரையும் ஒற்றோபர் முதல் மாச்சு வரையுமான காலப் பகுதியின்போது செய்யப்பட்ட அனுப்புகைகளின் விவரங்கள் உட்பட, ஆணையாளர் தலைமை யதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட, 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய*

கம்பெனியால் செய்யப்பட்ட அனுப்புகைகளின் விபரத்திரட்டொன்றை அவருக்கு ஒற்றோபர் 31 மற்றும் ஏப்பிறல் 30 அன்று அல்லது அதன் முன்னர் அரையாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய விபரத்திரட்டால் மேவப்படும் அத்தகைய காலப்பகுதியின்போது அனுப்புகைகள் எவையும் வெளிப்படுத்தப்படாதிருக்குமிடத்து "இல்லை" என்னும் விபரத்திரட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.".

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எவரேனும் ஆள் கொடுப்பதற்காளாகும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆள் அல்லது பங்குடைமை கொடுப்பதற்காளாகும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் ; "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையினால் செலுத்தப்படற்பாலதான காலாண்டு தவணைப்பணம், அவரால் அல்லது அதனால் அவ்வாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான வரியின் கால் பங்காகும்."

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் (2) ஆம் உட்பிரிவிலும் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும் :—

(அ) இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பெனியால் 53 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (ஆஆ) என்னும் பந்திகளின்கீழ் அல்லது 60 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள் தொடர்பில் ; அல்லது

(ஆ) இலங்கையில் வதிவற்ற ஏதேனும் கம்பெனியால் 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பந்தியின் (இ) என்னும் பந்தியின்கீழ், அத்தகைய கம்பெனியால் செய்யப்பட்ட அனுப்புகைகள் தொடர்பில், செலுத்தப்

படற்பாலதான வரியின் முழுத்தொகையும் விடயத்திற்கேற்ப அத்தகைய பங்கிலாபங்களை பகிர்ந்தளித்த அல்லது அத்தகைய அனுப்புகைகளைச் செய்த தேதியை அடுத்துவரும் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**33.** 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"இப்பிரிவின் நோக்கங்களுக்காக, தொழில்தருநர் ஒருவரிடமிருந்து பொருளாக அல்லது பணமாக ஊதியமொன்றைப் பெறுகின்றவரான ஆள் எவரும் அத்தகைய தொழில்தருநரின் ஊழியர் ஒருவராகக் கருதப்படுவார்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(அஅ) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குப் பின்னர் —

(i) மாதம் ஒன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு மூன்று இலட்சம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை;

(ii) எப்பணிப்பாளருக்கு அல்லது நிறைவேற்று அலுவலரல்லாத பணிப்பாளருக்கு அத்தகைய தொழில்தருநரால் கொடுப்பனவு எதுவும் செய்யப்படுகின்றதோ அல்லது அவரினால் அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ளதோ அல்லது ஊழியர் ஒருவராக அல்லது வேறேதேனும் தன்மையினவானவராக வேறேதேனும் நன்மையைப் பெறுகின்றாரோ அப்பணிப்பாளராக அல்லது நிறைவேற்ற அலுவலரல்லாத பணிப்பாளராகவிருக்கும் எவரேனும் தனியாளை ;

(iii) ஒன்பதாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியினுள் வருகின்றவரும் நேரடியாக அல்லது திரட்டு நிதியத்திலிருந்து பெறப்படும் நிதியங்களினூடாக திரட்டிய நிதியத்திலிருந்து செலுத்தப்படாத ஏதேனும் ஊதியத்தை பெறுகின்றவருமான எவரேனும் தனியாளை ; அல்லது" ; அத்துடன்

(2) "2000, யூலை 1 ஆந் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2000, யூலை 1 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அத்துடன் மேலே (அஅ) என்னும் பந்தி தொடர்பில் 2004, திசெம்பர் 1 ஆந் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 108அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**35.** பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 108அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :–

*"விசேட வீதங்களில் வரியைக் கழித்தல்.*

108அ. (1) நிறைவேற்று அலுவலரான அல்லது நிறைவேற்று அலுவலரல்லாத எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது ஏதேனும் கம்பெனியின் பணிப்பாளர்கள் சபையின் எவரேனும் தலைவருக்கு தொழில்தருநர் ஒருவர் ஏதேனும் ஊதியத்தைச் செலுத்துகின்றவிடத்து அல்லது ஏதேனும் நன்மையை வழங்குகின்றவிடத்து, அல்லது ஊழியர் ஒருவராகக் கருதப்படாத வேறெவரேனும் ஆளுக்குப் பணமாக அல்லது பொருளாக நன்மையை வழங்குகின்றவிடத்து, அத்துடன் அத்தகைய தொகைகள் 108 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்ப்பட்ட வரி அட்டவணைகளைப் பிரயோகிக்கையில் கணக்கிற்கெடுத்துக்கொள்ளப்படாதவிடத்து அத்தகைய தொழில்தருநர் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் அத்தகைய தொகைகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் பத்து சதவீதத்தில் வரியைக் கழித்தல் வேண்டும். அத்தகைய தொகைகள் அல்லது நன்மைகளின் பெறுமதி தொடர்பில் 109 ஆம் பிரிவின்கீழ் பணிப்புரை எதுவும் வழங்கப்படுதலோ அல்லது ஏற்றுக் கவனிக்கப்படுதலோ ஆகாது.

(2) இச்சட்டத்தின் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளில் கழிக்கப்பட்ட வருமானவரி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மீளக்கொடுப்பனவு எதுவும் செய்யப்படலாகாது ; ஆனால் அத்தகைய தொகைகள் அல்லது நன்மை யின் பெறுமதியானது அவ்வாண்டிற்கான அவரது மொத்த நியதிச் சட்டவருமானத்தில் சேர்க்கப்பட்டால், அத்தகைய வருமானவரியானது அதே வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய ஆளின் வருமானவரிப் பொறுப்புக்கு எதிராக எதிரீடு செய்யப்படலாம்.

(3) பிரிவு 108 இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான வரி அட்டவணைகளைப் பயன்படுத்தி ஏதேனும் ஊதியத்தின் மீதான வரியைக் கழிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டவரான எவரேனும் தொழில் தருநர் அவ்வாறு செய்யாமல் விடுகின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய ஊதியத்தின் மீது பத்துசத விகித வீதத்தில் வரியைக் கழிக்கின்றவிடத்தும், அத்தகைய தொழில்தருநர், 108 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக வரி அட்டவணைகளின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரிக்கும் இப்பிரிவின் கீழ் தொழில்தருநரால் கழிக்கப்பட்ட வரிக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தவணை தவறுகைக் குட்பட்ட அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் பின்வருமாறு கணக்கிடப்பட்டவாறு, தவணை தவறுகைக்குட்பட்ட அத்தகைய வரியின் பத்து சதவிகிதத்தினை விஞ்சாத தண்டமொன்றிற்கும் ஆளாதல் வேண்டும் :-

(அ) பிரிவு 98இன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக் கப்பட்ட விபரத்திரட்டு ஒன்றின் மீது செலுத்தப்படற்பாலதான வரியானது உரிய தேதியன்று அல்லது அதன் முன்னர் முழுமையாக அல்லது பாகமாகச் செலுத்தப்படாதவிடத்து அத்தகைய தவறுகையின் முதல் மாதத்திற்கு ஐந்து சத வீதத்திலும் தவறுகைக்குட்பட்ட அத்தகைய

வரித்தொகையின் மேல், ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் பின்னரான மாதத்தின் பாகத்திற்கும் மேலதிக ஒரு சதவீதத்திலும் ;

(ஆ) அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான விபரத்திரட்டு இல்லாதவிடத்து வரிமதிப்பீடு ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும் இயைபான வரியானது தவணை தவறுகையிலுள்ளவிடத்தும் தவறுகையிலுள்ள அத்தகைய வரித்தொகையின் பத்து சதவிகித வீதத்திலும் ;

(இ) வரிமதிப்பீடொன்றானது மேன்முறையீட்டிற்குட்பட்டு இருக்குமிடத்தும் வரியானது அத்தகைய மேன்முறையீட்டை தீர்த்து வைப்பதன்மேல் செலுத்தப்படற்பாலதாக வந்தவிடத்தும், செலுத்தப்படற்பாலதாக வந்த வரியின் அத்தகைய தொகை யின்மீது பத்து சதவீதத்திலும்,

அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய தொழில் தருநரிடமிருந்து அத்தகைய வரியை, இச்சட்டத்தின் கீழ் தவறுகைக்குட்பட்ட வரியாக அறவிடலாம்.

(4) 2004, ஏப்பிறல் 1 தொடக்கம் அதன் சார்பில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதி வரையான காலப் பகுதியின்போது வழங்கப்பட்ட, பணம் அல்லது வேறுவகையிலான ஏதேனும் நன்மைகளிலிருந்து (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வரியைக் கழிப்பதற்குத் தவறுகின்ற தொழில்தருநர் எவரும், எதிலிருந்து வரியானது கழிக்கப்படவில்லையோ அத்தகைய கொடுப்பனவுகளின் முழு விபரங்களை அத்தகைய தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தொழில்தருநர் வழங்கினால் தவணை தவறியவராகமாட்டார்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 118அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**36.** பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 118அ எனும் பிரிவாகப் பயன் கொண்டதாதலும் வேண்டும் :-

*"தவணை தவறுகையின் மீதான தண்டம்.*

118அ. பிரிவு 118இன் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் தொழில்தருநரினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமானவரியானது 2004 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற சம்பளக் காலப்பகுதி ஒன்று தொடர்பில் தவணைதவறுகையிலுள்ளவிடத்து, அத்தகைய தொழில்தருநர் அத்தகைய வரிக்கு மேலதிகமாக, பின்வருமாறு கணக்கிடப்பட்ட தவணைதவறுகையிலுள்ள அத்தகைய வரியின் பத்து சதவிகிதத்தை விஞ்சாத தண்டம் ஒன்றைச் செலுத்துதல் வேண்டும் :-

(அ) பிரிவு 98இன் (1) உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விபரத்திரட்டு ஒன்றின் மேல் செலுத்தப்படற்பாலதான வரியானது, உரிய தேதியன்று அல்லது அதன் முன்னர் முழுமையாக அல்லது பாகமாகச் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய தவணைதவறுகையின் முதலாவது மாதத்திற்கு ஐந்து சதவீதத்தின்படியும் அதன் பின்னர் தவணைதவறிய அத்தகைய வட்டித்தொகையின்மேல் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது ஒரு மாதத்தின் பாகத்திற்கும் மேலும் ஒரு சதவீதத்திலும் ;

(ஆ) அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான விவரத்திரட்டொன்று இல்லாதவிடத்து வரிமதிப்பீடு ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும் இயைபான வரியானது தவணைதவறியுள்ளவிடத்தும், அத்தகைய தவணைதவறிய வட்டித்தொகையின் பத்து சதவீதத்திலும் ;

(இ) வரிமதிப்பீடானது மேன்முறையீடொன்றின்கீழ் உள்ளவிடத்தும் அத்தகைய மேன்முறையீட்டை தீர்ப்பதன்மேல் வரியானது செலுத்தற்பாலதாக வந்துள்ளவிடத்தும், செலுத்தற்பாலதாக வந்த வரியின் அத்தகைய தொகையின் மீது பத்து சதவீதத்திலும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் "செய்யப்படவுரித்துடையவராதல் வேண்டும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "செய்யப்படவுரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், 2004 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக, எந்த வருமானத்திலிருந்து அத்தகைய வருமான வரியானது கழிக்கப்பட் டதோ அந்த வருமானமானது அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது மொத்த நியதிச்சட்ட வருமானத்தின் பாகமாக உருவானால் அத்தகைய ஊழியர் வரிக்கழிப் புச் சான்றிதழ் ஒன்றின் அடிப்படையின்மீது இவ்வத்தியாயத்தின்கீழ் கழிக்கப்பட்ட வரியை எதிரீடு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :-

"(iii) வங்கியுடன் அல்லது நிதி நிறுவனத்துடன் எவரேனும் தனியாளினால் பேணப்பட்ட எல்லா வைப்புக்களின்மீதும் அத்தகைய வங்கியினால் அல்லது நிதிநிறுவனத்தினால் 2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய தனியாளுக்குச் செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட வட்டியானது ஏதேனும் மாதத்தில்

ஒன்பதாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் அல்லது பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டவொரு ஏதேனும் காலப்பகுதியில் ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாவிற்குக் குறையாததுமாக இருக்கின்றவிடத்து ";

(2) அவ்வுட்பிரிவிலுள்ள (அ) எனும் பந்தியில் "அத்தகைய வைப்பீட்டின்மீது" என்பது தொடங்கி "கழித்தல் வேண்டும்" எனும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் :—

"அத்தகைய வைப்பீட்டின்மீது 2003, திசெம்பர் 31 ஆந் தேதி வரையிலான காலப்பகுதியின்போது செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட வட்டியின் மொத்தத் தொகையினதும் அத்துடன் 2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக அத்தகைய தனியாளினால் அத்தகைய வங்கியுடன் அல்லது நிதி நிறுவனங்களுடன் பேணப்பட்ட எல்லா வைப்பீடு களின்மீதும் செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக் கப்பட்ட வட்டியின் மொத்தத் தொகையினதும் பத்துச் சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரியை, அதைச் செலுத்தும்போது கழித்தல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, வைப்புத் தொகை யானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட் களினால் ஒரு இணை வைப்புத்தொகையாகப் பேணப் படுகின்றவிடத்து, அத்தகைய வைப்புத்தொகைகளின் மீதான வட்டியானது வருமானவரியைக் கழிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய இணைவைப்புத் தொகை யின்மீது அவரது உரித்துடைமையின் அளவுக்கு அத்த கைய தனியாட்களினால் வைத்திருக்கப்படும் ஏனைய வைப்புப் பணங்களின்மீது பெறப்பட்ட வட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையின்மீது எவரேனும் தனியாளுக்கு ஒருமுறை சேர்க்கப்பட்ட இணைவைப்புத் தொகை ஒன்றின் மீதான வட்டி எதுவும் வருமானவரியைக் கழிக்கும் நோக்கத்திற்காக திரும்பவும் வேறெவரேனும் தனியாளுக்குச் சேர்க்கப் படுதலாகாது. எவரேனும் பெறுநரால், நம்பிக்கைப் பொறுப்பாளரால், நிறைவேற்றுநரால், நிருவாகியால்,

காப்பாளரால் அல்லது பாதுகாவலரால் அல்லது ஒரு தனியாளின் அல்லது தனியாட்கள் குழுவொன் றிற்காக சேர்ந்து அதே தன்மையுடன் வேறெவரேனும் ஆளினால் பேணப்படும் வைப்புத்தொகை ஒன்றின் மீதான ஏதேனும் வட்டியானது இப்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் கவனிக்கப்படுதல் வேண்டும்.".

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 122ஆ எனும் பிரிவானது, அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் "இதனையொத்த வேறு கடன் வசதியை அல்லது நிதிச் சாதனத்தை" எனும் சொற்களுக்குப் பதிலாக "இதனையொத்த வேறு கடன் வசதியை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 122ஆ எனும் பிரிவைத் திருத்துதல்.*

**40.** 2003 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆயின், மேலும் அத்தகைய கழிப்பனவு ஆரம்ப வழங்குதலை அடுத்து ஏதேனும் வட்டியை அல்லது வேறு நன்மையைப் பெறுவதற்கான ஏதேனும் உரித்தின்றி கழிவுடன் வழங்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்பு கடன் பிணையம் தொடர்பானதாகவிருக்குமிடத்து, அத்தகைய ஆள், இப்பந்திக்கான முதலாவது காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்காக எதிரீடு செய்யப்படலாகாத அத்தகைய ஏதேனும் கழிப்பனவுத் தொகை தொடர்பில் 169 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் மீளளிப்புக்கு உரித்துடையவராகமாட்டார்.".

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 123அ எனும் பிரிவானது, "அத்தகைய ஆளின் வரிமதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஒரு பாகமாக அமையுமாயின் வட்டி வருமானத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கம்பெனி ஒன்றாகவிருக்கும் அத்தகைய ஆளின் நியதிச் சட்டவருமானத்தின் அல்லது கம்பெனி தவிர்ந்த ஆளொருவராகவிருக்கும் அத்தகைய ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஒரு பாகமாக அமையுமாயின் வட்டி வருமானத்தின்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 123அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 123ஆ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 123ஆ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

*"பிடித்து வைத்த வரிக்குப் பொறுப்பான வட்டியின்மீது செலுத்தப்பட்ட வருமானவரியின் மீளளிப்பு.*

123ஆ. (1) எவரேனும் ஆள் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில், இச்சட்டத்தின் 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் பத்து சதவீதத்திலான வருமான வரிக்கு அமைந்த ஏதேனும் வட்டியின்மீது வருமான வரியை அத்தகைய ஆள் ஏற்கனவே செலுத்தியுள்ளாரென எண்பித்துள்ளவிடத்தும் அத்துடன், அத்தகைய வரிக்கொடுப்பனவுத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் ஏதேனும் உரிமைக் கோரிக்கையானது எழுத்தில் செய்யப்பட்டிருக்கின்றவிடத்தும் அத்தகைய வட்டி வருமானத்தின்மீது 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் கீழ் கழிக்கப்பட்ட ஏதேனும் வரி தவிர்ந்த, அத்தகைய வட்டி வருமானத்தின்மீது அவரால் செலுத்தப்பட்ட அத்தகைய வருமானவரியின் மீளளிப்பொன்றுக்கு அத்தகைய ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வட்டி வருமானத்தை அதனது மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உட்படுத்தியுள்ள கம்பெனியொன்றாகவிருக்கும் ஆள் எவரும், 123அ எனும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உத்தேச கடனின் பயனைக் கொண்டும், அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அதனது வருமானவரிப் பொறுப்பை விஞ்சிய ஏதேனும் வருமானவரியைச் செலுத்தியுள்ளவிடத்தும், பின்னர் அத்தகைய விஞ்சுகை வருங்காலத்தில் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் வருமான வரிப்பொறுப்பிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டு முன்செல்லப்படலாம், ஆனால் அத்தகைய கம்பெனியானது அத்தகைய விஞ்சுகையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையதாதலாகாது.

*(3) கம்பெனி ஒன்றாகவிராத எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக வியாபார வருமானமாக அத்தகைய வட்டியைப் பெறுகின்ற பங்குடைமைக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்குத் திரளுகின்ற ஏதேனும் வட்டியானது அத்தகைய வட்டியின் மொத்தத் தொகையானது விடயத்திற்கேற்ப 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் வருமானவரிக் கழிப்பனவிற்கு உட்படும் என வரிமதிப்பீட்டாளர் திருப்தியுறும் வகையில் அத்தகைய ஆள் எண்பித்திருப்பின், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கான மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப் படுதலாகாது.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 124ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 124அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 124ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் வட்டி வருமானத் திலிருந்து கழிப்பனவுகள் செய்யப் பட்டுள்ளவிடத்து பணிப்புரைகளை வழங்கல்.*

*124ஆ. (1) அத்தகைய வட்டி வருமானமானது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய ஆளின் வரிமதிப்பிடத்தகு வருமானத்தின் பாகமாக உருவாகுமிடத்து, விடயத்திற்கேற்ப 122அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் அல்லது 122ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் கூட்டுறவுக் கடன் பிணைப்பொறுப்பை வழங்குகின்றதான ஒரு வங்கி, நிதி நிறுவனம் அல்லது ஒரு கம்பெனியினால் எவ்வாளிடமிருந்து வட்டி வருமானவரியானது கழிக்கப்படற்பாலதோ அந்தத் தனியாள் தவிர்ந்த எவரேனும் ஆள், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரித் தொகையானது 122அ மற்றும் 122ஆ என்னும் பிரிவுகளின்கீழ் அவ்வரிமதிப்பீட்டாண்டின்போது கழிக்கப்படற்கு வருமான வரியிலும் குறையானதாகவிருந்தால், அவ் வரிமதிப்பீட்டாண்டின்போது வருமானவரியினைக் கழிப்பதில் அவசியமான மாற்றங்களைச் செய்வதற்கு, வருமானவரிக் கழிப்பிற்கமைய, கூட்டுறவுக் கடன் பிணைப்பொறுப்பை வழங்குகின்ற வங்கிக்கு*

அல்லது நிதி நிறுவனத்திற்கு அல்லது ஏதேனும் கம்பெனிக்கு பணிப்புரை ஒன்றை வழங்குமாறு தேவைப்படுத்தி, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ளதும் அத்தகைய படிவத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் :

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டத்தின் வேறேதேனும் பிரிவின் கீழ் அத்தகைய ஆள் பணிப்புரை ஒன்றைப் பெற்றிருந்தால், அத்தகைய பணிப்புரையானது, இவ்வுட்பிரிவின் கீழ் பணிப்புரையொன்றைச் செய்வதில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) 124அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது இப்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதியின்போது 122அ என்னும் பிரிவின் (1) உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க வங்கி ஒன்றினால் அல்லது நிதி நிறுவனத்தினால் எந்தத் தனியாளின் வட்டி வருமானத்திலிருந்து வருமானவரியானது கழிக்கப்படற்பாலதோ அந்தத் தனியாள் எவரும், அத்துடன் -

(அ) அவரது வருமானத்தின் தொண்ணூறு சதவீதத்திற்கும் மேலானது அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய வட்டி வருமானத்தைக் கொண்டுள்ளதாகவிருக்குமிடத்து அத்தகைய வட்டி வருமானமானது அத்தகைய தனியாளின் முழுமையான வருமானமாக அல்லது வருமானத்தின் பெரும் பங்காகவிருக்குமிடத்து ;

(ஆ) எல்லா வங்கிகளிலும் நிதிநிறுவனங்களிலும் ஒன்றில் தனியாக அல்லது கூட்டாக அத்தகைய தனியாளினால் பேணப்படும் எல்லா வைப்புத் தொகைகள் மீது பெறப்படற்பாலதான வட்டி வருமானத் தொகையானது ஒரு மாதத்தில் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாமலும் ஏதேனும் பன்னிரெண்டு மாதகாலப் பகுதியில் மூன்று இலட்சம் ரூபாவிற்கு மேற்படாமலும் இருக்கின்றவிடத்து ; அத்துடன்

(இ) வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் வருமானம் உட்பட அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய ஆளின் மொத்த வருமானமானது அவ்வரிமதிப்பீட்டாண்டிற்காக மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்து,

அத்தகைய வைப்புத்தொகையானது வைத்திருக்கப்பட்டுள்ளதான இயைபான வங்கிக்கு அல்லது நிதிநிறுவனத்திற்கு, இயைபான அதிகாரியினால் அத்தகைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளைச் சரிபார்ப்பதில் தங்கியிருந்து 122அ எனும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அவரினால் பேணப்பட்ட வைப்புத் தொகைகளின் மீது செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து வருமானவரி எதுவும் கழிக்கப்படலாகாது எனத் தேவைப்படுத்தி விண்ணப்பமொன்றைச் செய்யலாம். விண்ணப்பமானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) வைப்புத் தொகை வைத்திருப்பவரின் முழுப்பெயரும் முகவரியும் அத்துடன் தேதியுடனும் வழங்கப்பட்ட இடத்துடனும் சேர்த்து தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் ;

(ii) *வைப்புத் தொகைகள் வைத்திருக்கப்பட்டு உள்ள வங்கி அல்லது நிதிநிறுவனத்தின் பெயர் ;*

(iii) *அத்தகைய வங்கியில் அல்லது நிதி நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள எல்லா வைப்புத் தொகைகளினதும் தொடர்பு இலக்கமும் ஒவ்வொரு வைப்புத் தொகைமீதும் செலுத்தப்படற்பாலதான வட்டியும் செலுத்தப்படற்பாலதான தேதியும் ;*

(iv) *வைப்புத் தொகைகள்மீது பெறப்படற் பாலதான மொத்த வட்டியின் அளவு தொடர்பிலான ஏதேனும் இயைபான நிகழ்வுகள் அத்துடன் அத்தகைய வருமானமானது மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தனியாளின் முழுமையான வருமானமாக அல்லது வருமானத்தின் பெரும்பாகமாக இருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய வரிமதிப்பீட் டாண்டிற்கான மொத்த வருமானமானது வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் வருமானம் உட்பட மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்தும் ; அத்துடன்*

(v) *மேலேயுள்ள விபரங்களின் சரியான தன்மையை சான்றுபடுத்தும் வெளிப் படுத்துகை ஒன்று,*

*அத்தகைய தனியாளின் வருமானம் தொடர்பான நிலையானது, பின்னர் மாற்றப்பட்டுள்ளவிடத்து, புதிய விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டும்.*

*3(அ) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு எல்லா விபரங்களையும் கொண்டதான விண் ணப்பம் ஒன்றை பெறுவதன் மீதும் அத்தகைய விண்ணப்பதாரரின் தனித்துவத்துடன் திருப்தி*

*யுற்று இருப்பதன் மீதும், பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது முகாமையாளர் ஒருவரின் பதவி வரிசையின் கீழ்ப்படாத எவரேனும் வேறு பெயர் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் அத்தகைய தனி ஆளுக்கு செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட வட்டியில் இருந்தான வரிக்கழிப் பனவில் இருந்து தவிர்ப்பதற்கு அத்தகைய அலுவலர் அல்லது நிறுவனம் இயைபான அதிகாரி அல்லது அவரால் அதிகாரம் அளிக் கப்பட்ட எவரேனும் வேறு அலுவலரில் இருந்து முரணான பணிப்புரை ஒன்றை பெற்றிருந்தால் அன்றி அவ் விண்ணப்பத்தின் மீது அவசியமான புறக்குறிப்பிடுதல்களை ஆக்குதலும் இயைபான அறிவுறுத்தல்களையும் வழங்குதலும் வேண்டும்.*

*(ஆ) பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது அத்தகைய வங்கியின் அல்லது நிதி நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக் கீழ்ப்படாத எவரேனும் வேறு பெயர் குறித்தொதுக் கப்பட்ட அலுவலர் அவசியமான புறக்குறிப்பிடு தலுடன் பெறப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய விண்ணப்பங்கள் யாவற்றினதும் மூலப் பிரதிகளை அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனத்துடன் அத்தகைய விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை வைத்துக்கொண்டு இயைபான அதிகாரிக்கு அல்லது இயைபான அதிகாரியால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் வேறு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(இ) வங்கி அல்லது நிதிநிறுவனம் ஒன்றிற்கு பிழையான தகவலை கொடுத்துதவியுள்ள அல்லது இப்பிரிவின்கீழ் வருமானவரி கொடுப்பனவு செய்யப்படாத நிவாரணத்தைப் பெற்றுள்ள எவரே னும் தனி ஆள் 122அ என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வட்டி வருமானத்தின்மீது உரிய அத்தகைய வரியுடன் அதன் மீதான நூறுவீத தண்டம் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி மற்றும் தண்டம்*

என்பன இச்சட்டத்தின்கீழ் தவணை தவறுகையில் வரி ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் அத்தியாயம் XXIIஇல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் அறவிடப்படுதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "இயைபான அதிகாரி" என்பது உண்ணாட்டு அரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 129அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 129 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 129அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"தவணை தவறுகை மீதான தண்டமும் வட்டியும்.*

129அ. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் வங்கி ஒன்றினால் அல்லது நிதிநிறுவனம் ஒன்றினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி எதுவும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக தவணைதவறுகையாயிருக்குமிடத்து அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் 129 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் 144 ஆம் பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தண்டம் மற்றும் வட்டி ஒன்றை அத்தகைய வரிக்கு மேலதிகமாக செலுத்துதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 130இ எனும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 130ஆ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது, என்பதுடன் அச் சட்டவாக்கத்தின் 130இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.*

130இ. (1) 2004, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இவ் அத்தியாயத்தின்கீழ் அத்தகைய வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து வருமானவரியைக் கழிப்பதற்கு பொறுப்பாயுள்ள

ஏதேனும் வங்கி அல்லது நிதிநிறுவனம் வரியின் அத்தகைய கழிப்பனவு தொடங்குவதற்கு முப்பது நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் தலைமை யதிபதியிடமிருந்து பதிவு இலக்கம் ஒன்றுக்காக விண்ணப்பித்தலும் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும், என்பதுடன் அத்தகைய கழிப்பனவுகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட மாதாந்த அடிப்படை ஒன்றின்மீது ஆணையாளர் தலைமையதிபதிக்கு விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும் :

ஆயின், 2004, சனவரி 1 ஆந் தேதி தொடக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதி வரையான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில், அத்தகைய பதிவு 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்பட வேண்டும்.

(2) அவ்வாறு பதிவுசெய்யாத அல்லது ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவாத ஏதேனும் வங்கி அல்லது நிதிநிறுவனம் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடிய ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டத்திற்கு ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 130ஈ மற்றும் 130உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் XVI ஆம் அத்தியாயத்தில் 131 ஆம் பிரிவுக்கு உடன் முன்னர் உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 130ஈ மற்றும் 130உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"குறித்துரைக் கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்தல்.*

130ஈ. (1) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இவ் அத்தியாயத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களில் இருந்து வருமானவரியினை கழிப்பதற்கு ஆளாகியிருக்கின்ற எவரேனும் ஆள் அல்லது ஏதேனும்

பங்குடைமை அத்தகைய வரிக் கழிப்பனவு தொடங்குவதற்கு முப்பது நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பதிவு இலக்கம் ஒன்றுக்காக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய கழிப்பனவு தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங் களைக் கொண்ட மாதாந்த அடிப்படை ஒன்றின் மீது விபரத்திரட்டு ஒன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும் :

ஆயின், 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதி வரையான காலப் பகுதியின்போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பதிவு 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்படல் வேண்டும்.

(2) அவ்வாறு பதிவுசெய்யாத அல்லது ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவாத ஏதேனும் வங்கி அல்லது நிதிநிறுவனம் ஆணையாளர் தலைமை யதிபதியினால் விதிக்கப்படக்கூடிய ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டத்திற்கு ஆளாதல் வேண்டும்.

வாடகை, குத்தகை வாடகை அல்லது அதையொத்த வேறு கொடுப்பனவு களிலிருந்து வரியைக் கழிப்பதற்குப் பொறுப்பான ஆட்களைப் பதிவுசெய்தல்.

130உ. (1) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இவ்வத்தியாயத்தின் கீழ் அத்தகைய ஆளினால் அல்லது பங்குடை மையினால் கொடுக்கப்பட்ட வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவுகளிலிருந்து வருமானவரியைக் கழிப்பதற்கு பொறுப்பாயிருக் கின்ற எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்கு டைமை அத்தகைய வரிக்கழிப்பனவின் தொடக் கத்திற்கு முப்பது நாட்களுக்கு முன்னராக ஆணை யாளர் தலைமையதிபதியிடமிருந்து பதிவு இலக்கம் ஒன்றுக்காக விண்ணப்பித்தலும் பெற்றுக்கொள்ளு தலும் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய

கழிப்பனவுகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய விபரங்களைக் கொண்டதான மாதாந்த அடிப்படை மீதான விபரத்திரட் டொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும் :

ஆயின், 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதி வரையான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட கொடுப்பனவு கள் தொடர்பில் அத்தகைய பதிவு இலக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்படல் வேண்டும்.

(2) அவ்வாறு பதிவுசெய்யாத அல்லது ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவாத எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை ஆணை யாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக் கூடியதான ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அரசாங்கம் "2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ஏதேனும் வேறு சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், "2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று", என்ற சொற் களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும், அத்துடன்

(2) "தண்டத்தின் பங்கை" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கை குடியரசின் கீழ் பணம் செலுத்தப்பட்ட ஏதேனும் பதவியை வைத்திருக்கின்ற எவரேனும் தனியாள் தொடர்பில், திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்படாத அல்லது இச்சட்டத்தின் 4 ஆம் பிரி வின் நியதிகளின்படி ஊழியத்திலிருந்து எழும் இலாபத்தின்கீழ் வரும் அத்தகைய ஏதேனும் தண்டத் தின் பங்கைத் தவிர வேறு "தண்டத்தின் பங்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 132இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 132ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 132இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :–

*“லொத்தர் அல்லது பந்தயம் அல்லது சூதாட்ட நடவடிக்கைகளை நடாத்துகின்ற ஆட்களைப் பதிவுசெய்தல்.*

132இ. (1) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் லொத்தர் அல்லது பந்தயம் அல்லது சூதாட்ட நடவடிக்கையை நடாத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை, இவ்வத்தியாயத்தின்கீழ் வழங்கப்பட்ட பரிசுகள் அல்லது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் இவ்வத்தியாயத்தின்கீழ் வருமானவரியொன்றின் கழிப்பனவிற்கு பொறுப்பாயிருந்தால் அத்தகைய செயற்பாடுகளின் தொடக்கத்திற்கு முப்பது நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பதிவு இலக்கம் ஒன்றுக்காக விண்ணப்பித்தலும் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும், என்பதுடன் அத்தகைய நடவடிக்கை தொடர்பில் ஆணையாளர் தலைமை அதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட மாதாந்த அடிப்படை மீதான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும் :

ஆயினும், 2004, ஏப்பிறல் 1 தொடக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆம் தேதி வரையான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில், அத்தகைய பதிவு இலக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்பட வேண்டும்.

(2) அவ்வாறு பதிவுசெய்யப்படாத அல்லது ஏதேனும் விபரத்திரட்டை கொடுத்துதவாத எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடியதான ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் XVI இ என்னும் புதிய அத்தியாயத்தினை உட்புகுத்தல்.

**49.** முதன்மைச் சட்டவாக்கத்தின் XVIஆ என்னும் அத்தியாயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் XVIஇ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்.

"அத்தியாயம் XVIஇ

எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையினால் செய்யப்பட்ட ஏதேனும் ஆண்டுத் தொகை அல்லது செலுத்தப்பட்ட அரசுரிமைப் பணம் அல்லது செலுத்தப்பட்ட ஏதேனும் முகாமைத்துவக் கட்டணம் அல்லது அதையொத்த கொடுப்பனவுகளிலிருந்து வருமான வரியினைக் கழித்தல்.

வருமானவரிக் கழிப்பனவிற்கு ஆண்டுதொகை அரசுரிமைப் பணம், முகாமைத்துவக் கட்டணம் அல்லது அதையொத்த கொடுப்பனவைச் செலுத்துகின்ற ஆட்கள்.

132ஈ. ஏதேனும் வேறு சட்டத்தில் முரணானது எப்படியிருப்பினும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை —

(அ) 90 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய ஆண்டுத்தொகை அல்லது அரசுரிமைப்பணம் தவிர்ந்த ஆண்டுத்தொகை அல்லது அரசுரிமைப் பணம் ஒன்றை செலுத்துகின்றவிடத்து ; அல்லது

(ஆ) ஏதேனும் முகாமைத்துவக் கட்டணம் அல்லது வேறு அதையொத்த கொடுப்பனவுகளைச் செலுத்துகின்றவிடத்து,

விடயத்திற்கேற்ப அத்தகை ஆள் அல்லது பங்குடைமை—

(i) செலுத்தப்பட்ட மொத்த ஆண்டுத் தொகை அல்லது அரசுரிமைப் பணத்தின் பத்துசதவீதத்தில் ; அத்துடன்

(ii) செலுத்தப்பட்ட ஏதேனும் முகாமைக் கட்டணம் அல்லது செய்யப்பட்ட வேறு ஏதேனும் அதுபோன்ற கொடுப்பனவுகளின் ஐந்துசதவீதத்தில் ;

வருமான வரியை ஆண்டுத் தொகை, அரசுரிமைப்பணம் முகாமைக் கட்டணம் அல்லது அத்தகைய அதையொத்த வேறு கொடுப்பனவுகளின் அத்தகைய கொடுப்பனவின்போது கழித்தல் வேண்டும் :

ஆயினும், எவ்வாறிருப்பினும் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் விடயத்தில், எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்குச் செலுத்தப்பட்ட ஆண்டுத் தொகை அல்லது அரசுரிமைப் பணம் என்பவற்றின் அத்தகைய கொடுப்பனவு ஏதேனும் மாதத்தில் ஐம்பதாயிரம் ரூபாவையும் ஏதேனும் வருடத்தில் ஐந்நூறாயிரம் ரூபாவையும் விஞ்சுகின்றவிடத்து மாத்திரமே அத்தகைய வரிகழிக்கப்படுதல் வேண்டும்.

*இவ்வத்தியாயத்திற்கு அத்தியாயம் XV இன் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கல்.*

132உ. (1) வங்கிகளாலும் நிதி நிறுவனங்களாலும் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்தான வருமான வரிக்கழிப்பனவு, அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமானவரிக்கான வரவு, பணிப்புரைகளினை வழங்கல், வங்கிகளினதும் நிதி நிறுவனங்களிதும் கடமைகள், வருமான வரிக் கழிப்பனவில் தவணை தவறுகை, வங்கிகள் மீதும் நிதி நிறுவனங்கள் மீதும் வரிமதிப்பீடுகள் வழங்கல், மேன்முறையீடுகள், தவணை தவறுகைக்கான தண்டப்

*பணம் என்பன தொடர்பில் அத்தியாயம் XV இன் ஏற்பாடுகள் ஏதேனும் ஆண்டுத்தொகையின் அத்த கைய கொடுப்பனவுகளிலிருந்தான வருமான வரிக் கழிப்பனவிற்கும், அரசுரிமைப்பணம், முகாமைக் கட்டணம் அல்லது 132ஈ என்னும் பிரிவில் குறிப் பிடப்பட்டவாறு அதையொத்த அத்தகைய வேறு கொடுப்பனவுகள், ஏதேனும் ஆண்டுத்தொகையின் அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்கின்ற ஆட் கள் அல்லது பங்குடைமை கடமைகள், அரசுரி மைப்பணம், முகாமைக் கட்டணம் அதையொத்த கொடுப்பனவுகள் அவ்வாறு கழிப்பனவு செய்யப் பட்ட வருமானவரிக்கான வரவு பணிப்புரைகள் வழங்கல் வருமானவரிக் கழிப்பனவில் தவணை தவறுகை, அத்தகைய ஆட்கள் மீது வருமான வரி மதிப்பீடுகள் வழங்குதல், மேன்முறையீடுகள், இவ்வத்தியாயத்தின் தவணை தவறுகைக்கான தண் டம் என்பனவற்றிற்கும் அத்தியாயம் XV என்பதில் "வங்கிகளும் நிதி நிறுவனங்களும்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆண்டுத் தொகை செலுத்துவதற்குப் பொறுப்பான ஆட்கள் அல்லது பங்குடைமைகள், அரசுரிமைப்பணம், முகாமைத் துவக் கட்டணம் அல்லது அத்தகைய அதையொத்த கொடுப்பனவு" என்னும் சொற்களும் அத்துடன் "வட்டி" என்ற சொல்லுக்கும் பதிலாக, "ஆண்டுத் தொகை, அரசுரிமைப்பணம், முகாமைத்துவக் கட்டணம் அல்லது அத்தகைய அதையொத்த கொடுப்பனவு" என்ற சொற்களும் அவை அவ் வத்தியாயத்தில் எங்கெங்கு காணப்படுகின்ற னவோ அங்கெல்லாம் இட்டாற்போன்றும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(2) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இவ்வத்தியாயத்தின் கீழ் வருமான வரி கழிப்பதற்கு ஆளான எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை வரியின் அத்தகைய கழிப்பனவு தொடங்குவதற்கு முப்பது நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் தலைமை யதிபதியிடமிருந்து அத்தகைய பதிவு இலக்கம் ஒன்றுக்காக விண்ணப்பித்தலும் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும் ;*

ஆயின், 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதி வரையான காலப் பகுதியின்போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பதிவு இலக்கம் 2004, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்பட வேண்டும்.

(3) அவ்வாறு பதிவுசெய்யாத அல்லது ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவாத எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடியதான ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(4) இவ் அத்தியாயத்தின் கீழ் வருமானவரி கழிப்பதற்கு ஆளாயிருக்கின்ற எவரேனும் ஆள் அல்லது ஆளாகியிருக்கும் ஏதேனும் பங்குடைமை ஆனால் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடக்கமான காலப்பகுதியின்போது கழிப்பனவு செய்யப்படாத வருமான வரியைக் கழிப்பதற்கு அதன் பொருட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தேதிவரைக்கும், அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை அத்தகைய தேதியின் முப்பது நாட்களினுள் வரிக் கழிப்பனவு இன்றி செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகளின் முழு விபரங்களையும் ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்திருப்பின் தவணை தவறுகையில் இருக்க மாட்டார் அல்லது தவணை தவறுகையில் இருத்தல் ஆகாது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**50.** 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாகத்தின் 134 ஆம் பிரிவானது மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்," என்ற சொற்களுக்கு பதிலாக, "அவ்வாளைத் தேவைப்படுத்தலாம் :

ஆயின், மேலும் 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கம்பெனி ஒன்றினால் கொடுபடற்பாலதான வருமானவரி தொடர்பிலான ஏதேனும் வரிமதிப்பீடு அத்தகைய வரிக்கொடுப்பனவிற்கான உரிய தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுற்ற பின்னர் செய்யப்பட வேண்டும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் மதிப்பீட்டாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும் என்னும் சொற்களுக்குப் பதிலாக வரிமதிப்பீட்டாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், மேலும் அத்தகைய வரிமதிப்பீடு அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட வரி மதிப்பீட் டிற்குப் பதிலாக ஒரு வரிமதிப்பீட்டுக்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும் என்பதுடன் மேலும் வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடுகள் எதுவும் செய்யப்படலாகாது எனும் சொற்களை இடுவதன் மூலமும்.".

**51.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 144அ மற்றும் 144ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் —

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 144அ, 144ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.*

*"வருமான வரியினை அறவிடுவதற்கான காலஎல்லை.*

144அ. இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளது எது எப்படி இருப்பினும் ஆனால் 162அ என்னும்

பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இவ்வத்தியாயத்தின் கீழ் தவணை தவறுகையில் உள்ள ஏதேனும் வரி தவணை தவறுகையாகிய அத்தகைய மாத முடிவில் இருந்து அறுபது மாதங்கள் காலம் ஒன்று முடிவுற்ற பின்னர் அத்தியாயம் XXII இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவிடற்பாலதாக இருத்தல் ஆகாது.

தவணை தவறுகையில் வரிக்கான தண்டனை.

144ஆ. கம்பெனி ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது முதன்மை அலுவலர் ஒருவர் அல்லது உறுப்பினர் ஒருவர் அல்லது கூட்டிணக்கப்படாத குழுமத்தின் பதவிதாங்குநர், உள்ளடங்கலாக எவரேனும் ஆள் அத்தகைய ஆளினால் கொடுபடற்பாலதான வருமானவரி தொடர்பில் கம்பெனி ஒன்று, பங்குடைமை அல்லது வேறு கூட்டிணைக்கப்படாத குழுமம் முறையே கொடுக்குமதியான அத்தகைய வரியின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளவிடத்தும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற அத்தகைய தவணை தவறுகை மற்றும் முப்பதாறு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதி ஒன்றுக்கான தொடர்கின்றவிடத்தும், தவணை தவறுகையில் வரித்தொகை, தவணை தவறுகைக் காலம், மற்றும் திரண்ட தண்டம் அத்துடன் வட்டி உள்ளடங்கலாக இயைபான விபரங்கள் கொண்டதாக சான்றிதழ் ஒன்றை நீதிவானுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். விடயத்திற்கேற்ப பணிப்பாளர் ஒருவர், முதன்மை அலுவலர், பங்காளர், உறுப்பினர் ஒருவர் அல்லது பதவி தாங்குநர் உள்ளடங்கலாக அத்தகைய ஆள், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று மாதங்களை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக் காலப்பகுதி ஒன்றுக்கு ஆளாதல் வேண்டும் :

ஆயின், கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவரின் விடயத்தில் அல்லது முதன்மை அலுவலரின் விடயத்தில் நீதிவான், அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பாக இல்லாமல் இருக்கின்ற அல்லது அத்தகைய வரிக்கொடுப்பனவு அல்லாமல் தவிர்ப்பதற்கு அவருடைய தத்துவத்தினுள் அவசியமான நடபடிகள் யாவற்றையும் எடுத்துள்ளார் என்கின்ற காரணத்தைக் காண்பிப்பதற்கு அத்தகைய ஆளை அனுமதிக்கலாம் :

ஆயின், மேலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் வரி அறவீட்டிற்காக XXII ஆம் அத்தியாயத்தின் கீழ் ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டு இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் வேறு அலுவலருக்கும் இடையிலான ஏதேனும் எழுத்திலான உடன்படிக்கையிருக்குமிடத்தும், அத்துடன் தவணை தவறுகையாளர், தவணை தவறுகையின் வரி அறவீட்டிற்காக 144அ என்னும் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தவணைக் கொடுப்பனவுகளில் தவணை தவறுகையில் வரியைச் செலுத்துவதற்கு அத்தகைய தவணை தவறுகையாளர் அத்தகைய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருப்பின் இப்பிரிவின்கீழ் செயற்படுத்துவதற்கு முன்னர் அது கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**52.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவானது அப்பிரிவின் 1 ஆம் உட்பிரிவில் "எவரேனும் ஆள்" மற்றும் "அவர்மேல் மதிப்பிடப்பட்டதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவணை தவறுகையாளராக இருக்கின்ற எவரேனும் ஆள்" மற்றும் "அவர்மேல் அல்லது வேறு வகையில் மதிப்பிடப்பட்டதான தவணை தவறுகையாக வரக்கூடிய," என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 162அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**53.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 162அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வரித்தவணை தவறுகை தவணைக் கொடுப்பனவுகளில் அறவிடப்படவுள்ளவிடத்து தவணைக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்ற காலப்பகுதியின்போது 144அ (1) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்கப்பால் நீடிக்கப்படுதலாகாது.

162அ. (1) தவணை தவறுகையில் உள்ள ஏதேனும் வரி இவ்வத்தியாயத்தின்கீழ் தவணைக் கொடுப்பனவுகளில் அறவிடப்பட்டுள்விடத்து செய்யப்படவேண்டிய அத்தகைய தவணைக் கொடுப்பனவுகளின் காலப்பகுதி தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் வரியின் அறவீடு தொடர்பில் 144அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்கப்பால் நீடிக்கப்படுதலாகாது.

144அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் அனுமதிக்கப்பட்டு ஆனால் செலுத்தப்படாத அத்தகைய ஏதேனும் தவணைக் கொடுப்பனவுகள் அத்தகைய உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இவ்வத்தியாயத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அறவிடப்படலாம்.

(2) (அ) 148 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் ஆதனத்தைப் பறிமுதல் செய்தல் ;

(ஆ) 149 ஆம் பிரிவின்கீழ் நீதிவான் ஒருவராக தண்டனைத் தீர்ப்பு வழங்குதல் ;

(இ) 150 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏதேனும் செல்லுபடியான அறிவித்தல் ஒன்றினை வழங்குதல் ;

(ஈ) 152 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் தவணை தவறுகையாளரின் தொழில்தருநருக்கு ஏதேனும் செல்லுபடியான அறிவித்தல் ஒன்றினை வழங்குதல் ; அல்லது

(உ) 158 ஆம் பிரிவின்கீழ் நீதிவானிற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் சான்றிதழ் ஒன்றை வழங்குதலும் இலங்கையை விட்டு வெளியேறுவதிலிருந்து தடுத்தலும் ;

144அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் இடம்பெற்றுள்ளவிடத்து, மேற்கூறப்பட்டவாறு வரி அறவீட்டுக்கான இயைபான நடவடிக்கை தொடர்புபட்ட ஏதேனும் அடுத்துவரும் நேரடியான நடவடிக்கை அத்தகைய உட்பிரிவின் ஏற்பாடுகளினால் பாதிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**54.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவானது அப் பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(8) இப்பிரிவின் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகளில் எதுவும் பின்வரும் கழிப்பனவுகள் தொடர்பில் செயற்படுதலாகாது —

(அ) 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவுகளின்கீழ் ஏதேனும் வட்டி மீதும், முதனிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் மீதும் முதனிலை வியாபாரி ஒருவரால் செலுத்தப்பட்ட வருமான வரி ;

(ஆ) (பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டு எவரேனும் முதனிலை வியாபாரியால் செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டி அல்லாத) 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவுகளின் கீழான ஏதேனும் வட்டி மீதும் அத்தகைய வட்டி அவருடைய வரி மதிப்பிடப்படற்பாலதான வருமானத்தில் உள்ளடங்கி இருக்காதவிடத்து, அல்லது 61 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழான ஏதேனும் பங்கிலாபங்கள் மீதும் எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட வருமானவரி ;

(இ) 33 ஆம் பிரிவின்கீழ் அல்லது 132 அ என்னும் பிரிவின் கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் வெகுமதிகள் அல்லது பெறப்பட்ட தண்டப் பணத்தின் பங்கு, லொத்தர் பரிசு ஒன்று அல்லது பந்தயம் அல்லது சூதாட்டத்தில் இருந்தான வெற்றி பெறுகைகள் மீது ஏற்பாடு செய்யப்பட்டவாறு எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட வருமானவரி.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**55.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் "தீர்ப்புக்கு முன்னர்" என்ற சொல் தொடக்கம் அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலுமான சொற்களுக்குப் பதிலாக, "தீர்ப்புக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவின் பந்திகள் (i) மற்றும் (ii) இன் கீழ் விதிக்கப்படக்கூடியதான தண்டனைப் பணத்தின் மூன்றிலொன்றிற்கு குறையாத அறவீட்டுத் தொகைக்கு அமைய அதன்கீழான எவையேனும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம். அல்லது இணங்கித் தீர்க்கலாம். அறவிடப்பட்ட அத்தகைய தண்டனைப் பணம் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமாக இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**56.** 2003 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவானது "வியாபாரம்" என்ற சொல்லின் வரைவிலக் கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"வியாபாரம்" என்பது கமத்தொழில் பொறுப்பு முயற்சி ஒன்றையும், குதிரைகளைப் பந்தயத்திற்கு விடுதலையும், கம்பெனி ஒன்றினால் ஏதேனும் காணி உள்ளடங்கலாக ஏதேனும் வளவினை வாடகைக்கு விடுதல் அல்லது குத்தகைக்கு விடுதலையும் மற்றும் காடு வளர்ப்பினையும் உள்ளடக்கும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**57.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வட்டணையின் பாகம் Iஆ வில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வட்டணையின் பாகம் Iஆ வை உடனடுத்துப் பின் வரும் புதிய பாகத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :—

"பாகம் Iஇ

2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு —

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 2,40,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 2,40,000 ரூபாவுக்கு | 20 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | 30 சதவீதம். |

(3) அவ்வட்டணையின் பாகம் III அ இல் "அல்லது அதன் பின்னர் தொடடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு மற்றும் வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்று சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அவ்வட்டணையின் பாகம் IIIஅ வை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தினைச் சேர்ப்பதன் மூலமும்.

"பாகம் IIIஆ

2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு

| | |
|---|---|
| முதல் 2,000,000 ரூபாவுக்கு | இல்லை |
| அடுத்த 500,000 ரூபாவுக்கு | 5 சதவீதம் |
| அடுத்த 500,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| மீதிக்கு | 15 சதவீதம் |

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**58.** 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப் பட்டவாறு முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்ட வணை மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் 5 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :—

"5 பங்குடைமைகள் (செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப் பீட்டின் மீது) 30 சதவீதம்"

(2) அதன் 6 ஆம் விடயத்தில் "1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டம்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக் கும் பதிலாக, "1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டம் அல்லது 96 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட களரிகள் அல்லது சங்கங்கள், 2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" ; அத்துடன்

(3) அதன் 10 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"10. 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க வியாபாரப் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அர சாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சிகள் —

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது | 30 சதவீதம் |
| (i) ஆம் பந்தியின்கீழ் கொடுபடற்பால தான வரியினை கழித்த பின்னர் அதி லிருந்தான இலாபங்களின் மீதிக்கு | 25 சதவீதம் |

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான ஆறாவது அட்டவணை யைத் திருத்துதல்.

**59**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஆறாவது அட்டவணை யானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வட்டவணையின் 5 ஆம் விடயத்தில் "ஏதேனும் கரையிலுள்ள வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற (பிரிவு 38)" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு ஏதேனும் கரையிலுள்ள வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கொடுக்கல் வாங்கல்களி லிருந்து எழுகின்றதும் மற்றும் 2003, யூன் 30 ஆந் தேதி உள்ளடங்கிய காலப்பகுதி வரைக்குமான இலாபம் மற்றும் வருமானம்மீது (பிரிவு 38)" ; என்னும் சொற் களை இடுவதன்மூலம்.

(2) அவ்வட்டணையின் 5 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின் வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலம் :—

| | | |
|---|---|---|
| 5அ. | ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறின் கரைக்கப்பாலுள்ள வெளிநாட்டு நாணயகொடுக்கல் வாங்கல்களிலிருந்தான இலாபங்களை மற்றும் வருமானம் மீதான வருமானவரிவீதம் (பிரிவு 38அ) | 20 சதவீதம் |
| 5ஆ. | அருங்கற்கள், இலங்கையில் அகழப்படாத உலோகங்கள் அல்லது ஏதேனும் பெற்றோலியம், வாயு அல்லது பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் அல்லது அத்தகைய வேறு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்திகள் தொடர்புபட்ட களஞ்சிய வியாபாரத்திலிருந்து ஏதேனும் சரக்கு அனுப்புநருக்கு அல்லது சரக்குப் பெறுநருக்கு எழுகின்ற இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமானவரி வீதம் (பிரிவு 38ஆ) | 10 சதவீதம் |

| | | |
|---|---|---|
| 5இ. | பொருட்களின் களஞ்சியம் அல்லது களஞ்சிய வியாபாரப் பொருட்களிற்கான வசதிகளை செயற்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளிற்கு எழுகின்ற இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமானவரி வீதம் (பிரிவு 38இ) | 10 சதவீதம் |
| 5ஈ. | கம்பெனிப் பங்குகளின் விற்பனை, உரிமைகள் அல்லது ஆணைப்பத்திரத்தின்மீது ஏதேனும் இலாபங்கள் அல்லது வருவாய்களிற்கு ஏற்புடையதான வருமானவரிவீதம் (பிரிவு 38ஈ) | அத்தகைய ஆள் 10 சதவீதத்தில் மட்டும் ஆளாகியிருந்தால் அன்றி 15 சதவீதம் |

(3) அவ்வட்டணையின் 20 ஆம் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :—

| | | |
|---|---|---|
| "21. | பிரிபடற்பாலதான இலாபங்கள் மீது வேறு செய்யப்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டின் மீது ஏதேனும் பங்குடைமைக்கு ஏற்புடையதான வருமானவரிவீதம் (பிரிவு 72அ) | 10சதவீதம் |
| 22. | உயர்தொழில் அல்லது களியாட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது கலைஞர் தொழிலை நிறைவேற்றுகின்ற இலங்கைப் பிரசாவுரிமை ஒன்று இல்லாதிருக்கின்ற எவரேனும் ஆளிற்கு ஏற்புடையதான வருமான வரிவீதம் (பிரிவு 91) | 15 சதவீதம் |
| 23. | எவரேனும் ஆளின் அல்லது 97ஆ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்வாறு பங்குடைமை ஒன்றின் விடயத்தில் பங்காளர் ஒருவரின் பெற்றோலியம் ஆய்ந்து தேடுதலில் இருந்தான ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையதான வருமானவரிவீதம் (பிரிவு 97ஆ)" | 15 சதவீதம்" |

**60**. 1997 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31அ என்னும் பிரிவு ; "அப்பிரிவின் 5 ஆம் உட்பிரிவில் கருதப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"கருதப்படுதல் வேண்டும் ; ஆயின், 2005, மாச்சு 31 ஆந் தேதியன்றுள்ள முதலீட்டு வரி விடுதொகையின் ஏதேனும் மீதம் முன்கொணரப்படுதலோ அல்லது மீளளிக்கப்படுதலோ ஆகாது.

**61**. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவுக்கும், 15 ஆம் பிரிவின் (ந) என் னும் பந்தி மற்றும் பிரிவுகள் 48அ, 61, 123அ, 123ஆ என்பவற்றுக்கும் இச்சட்டத்தின் பிரிவுகள் 4, 6(5), 20, 24, 41 பிரிவுகள் மற்றும் 42 ஆம் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஊ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 40 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002, நவெம்பர் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (LXXV) என்னும் புதிய பந்தியினை உட்புகுத்துதல் உட்பட 8 ஆம் பிரிவுக்கும் ; (அ) என்னும் பந்திக்கு (ஆ) என்னும் பந்தியின் காப்பு வாசகத்துக்கு இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2003, பெப்புருவரி 14 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 21ஈ, 21உ, 21ஊ, 38 அத்துடன் 52அ என்பவற்றுக்கு இச்சட்டத்தின் 9, 10, 12, 18 அத்துடன் 21 என்னும் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் 28 ஆம் மற்றும் 2(2) என்னும் பிரிவுகளால் பிரிவால், முதன்மைச் சட்டவாக்கத்துக்கு உட்புகுத்தப்பட்ட 3 ஆம் பிரிவில் (ஏஏ) என்னும் பந்தியும்97அ என்னும் புதிய பிரிவு,

எல்லா நோக்கங்களுக்காகவும் 2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) (அ) முதன்மைச் சட்டவாக்கத்தில் (LXXVI) அத்துடன் (LXXVII) என்னும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் 8 ஆம் பிரிவுக்கும் மற்றும் பிரிவுகள் 11, 15, (ந) என்னும் பந்தி தவிர்த்து 29, (1இ), (2), 31, 53, 60, 107, 119, 122அ, 122ஆ, அத்துடன் 169, 186 மற்றும் முதலாம், மூன்றாம் மற்றும் ஆறாம் அட்டவணைகளுக்கு இச்சட்டத்தின் 3, 5, 6, 15(2) அத்துடன் (3) , 17, 21, 22, 23, 34(1), 37, 38, 39, 54, 56, 57, 58 அத்துடன் 59 ஆம் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள் ; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 38அ, 38ஆ, 38இ, 38ஈ, 72அ, 97அ, 98அ, 108அ, 118அ, 124ஆ. 129அ, 131அ, 131ஆ, 132இ, 144அ, 144ஆ, 162அ அத்துடன் அத்தியாயம் XVIஇ என்பவற்றிற்கு இச்சட்டத்தின் 19, 25, 28, 31, 35, 36, 43, 44, 46, 48, 51, 53 அத்துடன் 49 என்னும் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள்,

எல்லா நோக்கங்களுக்காகவும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*செல்லுபடியாக்குதலும் நட்டோத்திர வாதமும்.*

**62.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர்பொருட்டு எவரேனும் ஆளிடமிருந்து அறவிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வரித் தொகை, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் ஏற்புடைமையின் பயனைக்கொண்டு ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அறவிடப்பட்டும் விதிக்கப்பட்டதுமான அத்தகைய வரி அத்தகைய ஆளினால் அவ்வாறு செல்லுபடியானதாக அறவிடப்பட்டு அத்துடன் விதிக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி மற்றும் அத்தகைய வேறு ஆள் அத்தகைய வரிவிதிப்பனவு மற்றும் சேகரிப்பு தொடர்பில், ஏதேனும் குடியியல் நடவடிக்கை அல்லது குற்றவியல் நடவடிக்கையிலிருந்து இத்தால் நட்டோத்திர வாதமளிக்கப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**63.** இச்சட்டத்தின் சிங்கள் உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்